

# வையாளி-4

## பிரிவுபசார மலர்



உயர் தர மாணவர் ஒன்றியம்

தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி

(தேசிய பாடசாலை)

2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**அருள்மிகு மங்களநாதர் திருக்கோயில்**

தி/உவர்மலை விவேகனந்தா கல்லூரியின் தொழிநுட்பப் பிரிவு வளாகத்தில் சிவத்திரு ஆறுமுகம் சிவசம்பு குணரத்தினம் தெய்வத்திரு திருமதி.சிவநேசரத்தினம் குணரெத்தினம் மற்றும் சிவத்திரு குணரத்தினம் சுகந்தீபன் நினைவாக அவர்களது குடும்பத்தினரால் அருள்மிகு மங்களநாதர் ஆலயம் நிறுவப்பட்டு 2021/11/26ந் திகதி கும்பாபிசேகம் சிறப்பாக நடைபெற்று வழிபாட்டிற்காக சிவனடியார்களுக்கு வழங்கப்பட்டது .

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மகுட வாசகம்

கல்வி, ஒழுக்கம், தூய்மை

## Motto

Education, Discipline, Purity

## நோக்கு

அறிவு மிகுந்த உலகிற்கு ஈடு கொடுக்கத்தக்க தேர்ச்சி மிக்க பிரஜைகள்

## Vision

Competent citizens who cope with the erudite world

## பணி

களத்தில் நடப்பது கடந்தகால நிகழ்கால அனுபவங்களுடன் வருங்காலத்தின் சவால்களை ஆராய்ந்தறிந்து மேம்பட்ட கற்றற் சந்தர்ப்பங்களை வழங்குவதன் மூலம் அறிவும், திறனும், ஒழுக்கமும் உள்ள மாணவர்களை உருவாக்கிக் கொடுத்தல்

## Mission

To create knowledge, skillful, disciplined and honest students by providing ameliorated learning opportunities through an analysis of the experiences of the past present and the challenges of the future



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை கீதம்

உவர்மலை கல்லூரி விவேகானந்தா வாழ்க
ஊதா வெள்ளைக் கொடி நிமிர்ந்தாட
உவர்மலை மக்கள் உவந்தளித்தனராம்
உயரிய செயலால் உளம் நிறைந்தனராம்!

ஒளியருள் கோணேசர் மலைமுடியில் - எங்கள்
எழில் தவழ் உவர்மலை கலை வடிவில்
கிளி மொழி தமிழ் எங்கும் வழிந்தோட – அதன்
கிருபையில் நாட்களும் கழிந்தோட!

கங்கா ஜமுனா காவேரி சிந்து
கற்பவரிடையே படை நான்கும்
எங்கள் திறமைகள் துலங்கிடுமே – அதன்
இனிமையில் பணிகளைத் தொடங்குவோமே!

உலகின் சிகரம் கல்வியென்போம் - அதன்
உண்மையை உணர்வோம் உயர்வடைவோம்
கலைகள் பலவும் வளர்த்திடுவோம் - என்றும்
கற்றதை மற்றவர்க் குணர்த்திடுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## School Details

| | |
|---|---|
| **Name of school** | : T/Orr's Hill Vivekanada College (National School) |
| **Address** | : Central Road, Orr's Hill, Trincomalee |
| **Type of school** | : National School |
| **School was started on** | : 10.02.1978 |
| **School ID No** | : 1701008 |
| **School census No** | : 16058 |
| **Examination No** | : 29124 |
| **Province** | : Eastern |
| **District** | : Trincomalee |
| **Division** | : Trincomalee |
| **Zone** | : Trincomalee |
| **Divisional secretariat** | : Town & Gravets, Trincomalee |
| **Election NO** | : 14 – Trincomalee |
| **School phone No** | : 026-222 2761 |
| **SDS No** | : 0002366381 |
| **Facilities fees No** | : 0002366019 |
| **Postal No** | : 31000 |
| **Grama servakar division No** | : 244/P |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை



தி/உ வர்மலை விவேகானந்தா கல்லூரியிலிருந்து 2018ம் ஆண்டு தொடக்கம் வருடாந்தம் வெளிவரும் "வையாளி-4" சஞ்சிகைக்கு 2021ம் ஆண்டிலும் வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

தேசிய பாடசாலையாக 2021.06.10 ஆந் திகதி தொடக்கம் தரமுயர்த்தப்பட்ட பின் முதலாவது அதிபராக இருந்து வாழ்த்துச் செய்தி வழங்குவதற்கு வாய்ப்புக்கிட்டியுள்ளது.

மாணவர்களின் சாதனைகள் பாடசாலைத் தகவல்கள், இவ்வருடம் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் தகவல்கள், புகைப்படங்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் ஆக்கங்கள் என்பவற்றைக் கொண்டதாக இச்சஞ்சிகை அமைந்திருப்பது சிறப்பானதாகும்.

எதிர் காலத்தில் கல்லூரியின் தேவைக்காக வரலாறுகளைத் தேடும் போது இவ்வாண்டில் நடைபெற்ற விடயங்கள் மற்றும் உயர் தரத்தில் கல்வி கற்ற மாணவர்களின் தகவல்கள் என்பவற்றைப் பெற்றுக்கொள்வது இலகுவானதாக அமையும் என்பது எதிர்பார்ப்பாகும்.

இச்சஞ்சிகை வெளிவருவதற்கு பொறுப்பாளராக செயற்பட்ட ஆசிரியர்கள் திரு.R.கேதீஸ்வரன், திருமதி.T.கெங்காதரன், திருமதி.K.ஜெயபாலினி மற்றும் 2022ம் ஆண்டில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் உயர்தர வகுப்பு மாணவர்கள், பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், வகுப்பாசிரியர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள்.

மேலும் எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய இவ்வருடம் பரீட்சை எழுதவிருக்கும் அனைத்து மாணவர்களும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று நல்லொழுக்கப் பண்புகளுடன் சமுதாயத்தில் மிளிர வேண்டுமென எனது உயர்வான நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. க. ரவிதாஸ்
அதிபர்
தி/உ வர்மலை விவேகானந்தா கல்லூரி
(தேசியபாடசாலை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி



“நிலையான உலகில் நிலைத்து நிற்கக்கூடியது கல்வி ஒன்றேயாகும்” கல்வியினுடைய வரலாற்றுத் தடையங்களையும், சாதனையாளர்களையும் இன்றும் நாம் ஈண்டு அசைபோட்டுக்கொண்டே இருக்கின்றோம். இந்நிலையில் எமது கல்லூரி மாறிவரும் உலகின் அனைத்து பாடத்துறைகளுக்குமுரிய ஒரு தனித்துவத்தைக் கொண்டு “தேசியபாடசாலை” என்ற பரிணாமத்துடன் விளங்குவது இக் கல்லூரி வரலாற்றில் ஒரு முக்கிய அம்சமாகும்.

அந்த வகையில் இவ்வருடம் க.பொ.த உயர்தரத்தில் (2021) பரீட்சைக்குத்தோற்றும் மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கி “வையாளி” எனும் சஞ்சிகையானது தொடர்ச்சியாக வெளிவருவதையிட்டு அகமகிழ்கின்றேன்.

மேலும் இம்மாணவர்கள் இமயம் தொட்டு வாழ்க்கையில் மேலோங்கி விளங்க வாழ்த்துவதுடன் இம்மாணவர்களால் பிரசவிக்கப்படுகின்ற இந்நூலானது அடி மனதில் அமிழ்ந்து கிடக்கின்ற அறிவுச் சுரங்கங்களைக் கிளர்ந்து விடியலைத் தேடி அலையும் மாணவச் செல்வங்களுக்கு விடிவிளக்காய் திகழ வாழ்த்துகிறேன்.

இந் நூல் வெளிவருவதற்கு முன்னின்று உழைத்த அனைத்து உள்ளங்களுக்கும் வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் வழங்குவதில் பெருமிதம் அடைகின்றேன்.

திரு.ம.பிரகாஷ்
பிரதி அதிபர் (அபிவிருத்தி)
தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி
(தேசியபாடசாலை)

---

## வாழ்த்துச் செய்தி



பாடசாலைக் காலமென்பது எமது வாழ்வில் பொன்னான காலம். இப்பதின்மூன்று வருட காலத்திலே நாம் பலவற்றைக் கற்றிருக்கின்றோம், பலவற்றைப் பெற்றிருக்கின்றோம், அதேபோன்று பலரைச் சந்தித்திருக்கின்றோம். பாடசாலை யானது வெறுமன ஏட்டுக்கல்வியை மட்டும் வழங்கும் ஒரு கூடமல்ல.

மாறாக வாழ்க்கை அனுபவங்களையும், சால்களையும் எதிர்கொள்ளும் மனப்பக்குவத்தையும் சேர்த்தே வழங்குகின்ற ஒரு சாலையாகும்.

எனவே இக்காலத்திலே நீங்கள் கற்றுக் கொண்டற்றையும், பெற்றுக்கொண்ட வற்றையும் உங்கள் வாழ்வில் பிரயோகிக்கும் தனிப்பறவைகளாய் பாடசாலையைவிட்டு வெளியேறு கின்றீர்கள். உங்கள் வாழ்வு சிறக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்.

“முடிந்தவரை முயலாதே, முடியும் வரை முயற்சிக்க தவறாதே”

திரு.கு.தியோகுப்பிள்ளை
பிரதி அதிபர் (நிர்வாகம்)
தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி
(தேசியபாடசாலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி



கரையில்லாக் கல்வியை வாரிவழங்கும் கல்லூரிச் சாலையில் பதின்மூன்று வருடக்கல்வியைக் கற்று எதிர்கால இலக்கை நோக்கி வெற்றிநடை போட காத்திருக்கும் மாணவச் செல்வங்களே; உங்கள் கனவுப் பயணம் சிறப்பாக அமைய எமது ஆசிகள்.

சவால்கள் நிறைந்த இப்பயணததில் இடைவிடா முயற்சியும், பயிற்சியும், ஊக்கமும் நிச்சயம் உங்ககள் இலக்கிற்கு இட்டுச்செல்லும் என்பதில் ஐயமில்லை. 21ம் நூற்றாண்டின் சிற்பிகளான உங்களிற்கு கற்கைநெறிகள் பற்பல விரிந்து பரந்து கிடைக்கிறது. உரியவாறு சரியான பாதையை தெரிந்து அதனை நோக்கி உயர்ந்த சீலர்களாகத்திகழ வேண்டும். உரிய வழிகாட்டல்களை உங்கள் ஆசிரியர்களிடம் பெற்றிடுங்கள். "வையாளி" எனும் இச்சஞ்சிகை உங்கள் கல்லூரி நினைவுகளை என்றும் மீட்டித்தந்து, பள்ளிப்பருவத்தை பறைசாற்றட்டும்.

"முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்"

திருமதி.சு.கோகுலதாஸன்
உதவி அதிபர்
தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி
(தேசியபாடசாலை)

---

## வாழ்த்துச் செய்தி



குரைகடலோத நித்திலங் கொழிக்கும் கோணமாமலையில் அமைந்திருக்கும் தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரியின் உயர்தர மாணவர் ஒன்றியத்தால் ஆண்டுதோறும் வெளியிடப்படும் பிரிவுபசார மலரான **வையாளிக்கு** வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் உவகையடைகின்றேன்.

மாணவர்களின் உள்ளார்ந்த திறன்கள் மற்றும் சுய ஆற்றல்களை எழுத்து வடிவில் பிரசுரிப்பதன் மூலம் அவர்களது திறமைகள் இம்மலரினூடாக வெளிக்கொண்டுவரப்படுகிறது.

**"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் மற்றது**

**தள்ளினும் தள்ளாமை நீர்த்து" (596)**

என்றவாறு மாணவர்களை உயர்வான சிந்தனைகளை சிந்திக்கத் தூண்டுவதாகவும் இச்சஞ்சிகை அமைந்திருப்பது பெரிதும் விரும்பத்தக்கது.

அந்த வகையில் இச்சஞ்சிகை தடங்கலின்றி வெளிவர பலவழிகளிலும் முன்னின்று உழைத்த மலர்க்குழுவினருக்கும் ஆக்கங்களை வழங்கியுதவியவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிப்பதுடன் "வையாளி" சஞ்சிகையின் நோக்கம் சிறப்பாக அமையவும் எதிர்காலத்தில் புதுப்புது ஆக்கங்களைத் தாங்கி வெளிவரவும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திருமதி.த.விஷ்ணுகுமார்
உதவி அதிபர்
தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி
(தேசியபாடசாலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிவுகள்...


1. எமது கல்லூரியில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகள் - 2021
2. 2020 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவானோர் விபரம்
3. 2021 இல் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் விபரம்
4. இணைப்பாடவிதான சாதனையாளர்கள் விபரம் - 2021
5. க.பொ.த உயர்தர பிரிவு மாணவர்களிற்கு கற்பித்த ஆசிரியர்கள் விபரம் - 2021
6. விசேட தினங்கள்
7. சுயமுயற்சியே எதிர்காலம்
8. சுமை
9. சிந்தனைத்துளிகள்
10. வாழ்வின் மிகச் சிறந்த போதனை
11. உயிர் தந்த உயிரே
12. சரித்திரம் உன்னைப் பேசட்டும்
13. என் அன்புத் தாய்
14. ஒற்றை மந்திரம
15. தனித்துவமே மனித குலத்தின் மகத்துவம்
16. பள்ளியில் எனது இறுதி நாட்கள்
17. இலக்கை நோக்கிப் பயணித்தல்
18. கல்விச்சாலை வாழ்க
19. வானவில் தோற்றம்
20. வாழ்க தாய்த்தமிழ்
21. என் பாடசாலையில் என் தொடக்கம்
22. ஜொலிக்கிறதே ஆலங்கேணி
23. வீட்டிலேயே மண்புழு உரம் (*Vermi compost*) செய்வோம்
24. அறிந்துகொள்வோம்
25. அனுபவமே சிறந்த ஆசான்
26. Nature notes
27. People need you
28. விதைப்பவன் உவமையின் மறு நோக்கு
29. The city we live
30. பள்ளிக் காலங்கள்
31. உள்ளக சுடரே எரிவாயோ
32. பூ மராங் எனும் வளரியின் வரளாறு
33. கைக்கூ கவிதைகள்
34. உன் தனித்துவம் உணர்ந்திடு
35. தெரிந்து கொள்வோம்
36. நன்றி மொழிதல்



**நூல் ஆக்கக் குழு:**

திரு.க.ரவிதாஸ் - அதிபர்

**பொறுப்பாசிரியர்**

திரு.இ.கேதீஸ்வரன

திருமதி.க.ஜெயபாலினி

திருமதி.கெ.தமயந்தி

**இதழாசிரியர்**

செல்வி.*K*.ஹரிஷியா

**இதழ் குழு**

செல்வன்.*A*.தவருக்ஷன்

செல்வி.*S*.செரூபி

செல்வி.*L*.கோமிகா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது கல்லூரியில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகள் – 2021

- சிவன் ஆலய நிர்மாணம் ( 2021.11.26 )
- குடிநீர் வசதிக்கான கட்டிடம் அமைக்கப்பட்டு 20 குழாய்களும், நீர்த்தாங்கியும் அமைக்கப்பட்டது.
- தரம் 11 இற்கு 8 மின்விசிறிகளும் 24 மின் குமிழ்களும் 12 பிளக் வசதிகளும் ஏற்படுத்தப்பட்டது.
- பாடசாலை மதில் புனரமைப்பு.
- ஸ்மாட் வகுப்பறை அமைப்பு.
- 03 கணினிகள் கொள்வனவு.
- மாணவர் விடுதியில் கூட்ட மண்டபம் அமைப்பு.
- தொழிநுட்பப் பிரிவுக்கான வேலைத்தளம் புனரமைப்பு.
- இராஜ மன்னர் வகுப்பறை தற்காலிக அடைப்பு.
- தொழிநுட்பப் பிரிவுக்கான மலசலகூட அமைப்பு.
- கூட்ட மண்டபத்திற்கான கணினிகள், எறிகருவி, திரை, ஒலிபெருக்கி கொள்வனவு.

### தேசியபாடசாலையாகதரமுயர்வு

2021.06.10 தொடக்கம் எமதுகல்லூரி
தேசியபாடசாலையாகதரமுயர்த்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Principals



**Mr.M.Pragash**
Deputy Principal (Dev)



**Mr.K.Ravithas**
Principal



**Mr.C.Deogupillai**
Deputy Principal (Adm)



**Mrs.S.Kokuladasan**
Vice Principal



**Mrs.T.Vishnukumar**
Vice Principal

# Sectional Heads



**Mrs.S.Anantharajah**
**(1-5)**



**Mrs.S.Manivannan**
**(6-7)**



**Mrs.T.Gengatharan**
**(8-9)**



**Mr.V.Suntharajan**
**(10-11)**



**Mr.V.Mohanarajah**
**(Arts & Com)**



**Mr.N.Umasankar**
**(E-Tech & B.Teach)**



**Mrs.K.Jeyabalini**
**(Bio & Maths)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Biological Science Stream - 2021 Batch



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Physical Science Stream - 2021 Batch



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Bio Systems Tech Stream - 2021 Batch



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2020 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவானோர் விபரம்

| Name | Result | Course | University |
|---|---|---|---|
| **Physical Science Stream** | | | |
| S.Mithushanth | 3A (Merit) | Engineering | Moratuwa |
| C.Piriyaloshan | 3A (Merit) | Engineering | Moratuwa |
| V.Rachsuthan | 2A B | Engineering | Ruhuna |
| W.M.Prasanna Gunasehara | A 2B | Engineering | Jaffna |
| K.Pamithan | 2B C | Engineering (EM) | Moratuwa |
| T.Nilukshan | A B C | Quantity Surveying | Moratuwa |
| U.Krisothman | 2B C | Surveying Science | Sabragamuwa |
| M.Vathusan | A B C | Electronic & Computer Sci | Kelaniya |
| D.J.Dilukshan | A B C | Softwear Engineering | Sabragamuwa |
| R.Nilakshan | B 2C | Physical Science | Sri Jeyawardenepura |
| M.Akshayan | B 2C | Computer Science & Tech | Uwawellasa |
| G.Thudesh steve raj | 3C | Physical Science | Jaffna |
| C.Dineshca | 2C S | Physical Science | Eastern |
| V.Siranjeevi | 2C S | Physical Science | South Eastern |
| P.Archana | C 2S | Physical Science | Eastern |
| **Biological Science Stream** | | | |
| R.Nerashika | 3A (Merit) | Medicine | Peradeniya |
| J.Gobisharan | A 2C | Physiotherapy | Peradeniya |
| T.Jathurshika | 2B C | Siddha Medicine | Eastern |
| B.Tharshana | 3C | Food Production and Technology management | Wayamba |
| S.Shangavi | 2C S | Agriculture | Jaffna |
| **Commerce Stream** | | | |
| D. Warrenpillay | 2A B | Business Science | Moratuwa |
| S.Ann Antonitta | 2A B | Accounting | Kelaniya |
| A.Joice Amesha | 3A | Mangement | Rajarattai |
| M.Vipulan | A 2B | Mangement | Jaffna |
| T.Harrysshyam | A B C | Mangement | Jaffna |
| P.Thushani | A B C | Mangement | Jaffna |
| V.Tharshika | 2A C | Mangement | Jaffna |
| S.Tharsha | A B C | Mangement | Jaffna |
| **Technology Stream** | | | |
| T.Pravneeth | A 2B | Information Communication Technology | Sri Jayewardenepura |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2021 இல் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் விபரம்

கணிதப் பிரிவு

| முழுப்பெயர் | முகவரி |
|---|---|
| விக்னேஸ்வரன் பிரணவன் | 46, 4ம் ஒழுங்கை, உவர்மலை, திருகோணமலை. |
| சந்திரசேகரம் யுவாஷிகன் | 13A, ஸ்பெல்வின் வீதி, உவர்மலை,திருகோணமலை. |
| மகேஸ்வரன் கேயிஸ்மன் | 305, அன்புவழிபுரம், திருகோணமலை. |
| இராஜயோகம் சஞ்ஜெயன் | 62/9, கனேஸ்காடின், கண்டி வீதி, திருகோணமலை. |
| விஜயநாதன் அபிராஜ் | 10/A, கண்ணகிபுரம், 3ம் ஒழுங்கை,திருகோணமலை. |
| பாலகுமாரன் ஜோகதர்சன் | 1205, பாலையூற்று, திருகோணமலை. |
| அற்புதரவி ரமிக்ஷன் | 35, மத்திய வீதி, உவர்மலை, திருகோணமலை. |
| இலங்கேஸ்வரன் நவீன்குமார் | 29/11, மத்திய வீதி, உவர்மலை, திருகோணமலை. |
| ஜெகதீஸ்வரன் டனுஷிகன் | 3ம் வட்டாரம், நிலாவெளி, திருகோணமலை. |
| சித்திரவேல் துவாரகன் | புத்தினிபுரம், பாலம்போட்டாறு, தம்பலகாமம். |
| லக்ஷிமிகாந்தன் லாவண்னியன் | 33/3, பாரதி வீதி, திருகோணமலை. |
| அம்ஷிகா நடேசபவானந்தம் | 60/3, மாதுமை வீதி, கண்டி வீதி, திருகோணமலை |
| தனிஸ்கா புருஷோத்தமன் | 61/8, விகாரை வீதி, திருகோணமலை. |

உயிரியல் பிரிவு

| முழுப்பெயர் | முகவரி |
|---|---|
| இரவீந்திரன் ரிசீவன் | 23/11, லோவர் வீதி, உவர்மலை, திருகோணமலை. |
| அற்புதராதா டிறோன் | 35, மத்திய வீதி, உவர்மலை, திருகோணமலை. |
| ஜெகநாதன் டிபிஸ்ரன் | மல்லிகைத்தீவு, மூதூர் |
| சுகிந்திரன் டனோஜ் | சம்பூர், மூதூர் |
| நிலக்ஷினி உமேஸ் | 40/21, சிவபுரி, திருகோணமலை |
| திவ்வியாளினி பேரானந்தராஜா | 27/18, மக்கேஸ்சர் வீதி, திருகோணமலை |
| கபிஷாலினி நவலோகநாதன் | 173, 4வது ஒழுங்கை, ஆனந்தபுரி, திருகோணமலை |
| லக்ஷனா துரேந்திரன் | 20/1, 3வது ஒழுங்கை, உவர்மலை, திருகோணமலை |
| கிருத்திகா பரந்தாமன் | 24/9, 2வது ஒழுங்கை லிங்கநகர், திருகோணமலை |
| லோஜனா புஸ்பராசா | 71, கண்டி வீதி, லிங்கநகர், திருகோணமலை |
| ஹேமதா விஜயகேந்திரன் | 479/85, தபோவணம் வீதி, திருகோணமலை |
| கிஷோத்தனா குணரத்தினம் | பட்டித்திடல், மூதூர் |
| திவ்வியா சௌந்தராசா | 684, அண்ணா வீதி |
| டெபில்லா ஜெயரமண் | 202/5, லோவர் வீதி, உவர்மலை, திருகோணமலை |
| தனுஷினி தயாபரன் | பாலத்தடிச்சேனை, மூதூர் |
| சஞ்ஜீவினி மாதவராசா | பாலத்தோப்பூர், மூதூர் |
| திலக்ஷனா நிதாகரன் | 2ம் வட்டாரம், கிளிவெட்டி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தகப் பிரிவு

| முழுப்பெயர் | முகவரி |
|---|---|
| தவபாலன் தனுஜன் | 43/11*B*, ஆசிரியர் சதுக்கம், உவர்மலை |
| தேவதாஸ் மேஷியம் | 51/1, பூம்புகார் வீதி, பாலையூற்று |
| இருதயராஜா சனுஜன் | 200, லோவர் வீதி, உவர்மலை |
| கங்காதரன் விஜிதரன் | 32, 3வது ஒழுங்கை, கண்ணகிபுரம், உவர்மலை |
| சமந்த சன்ஜெய் | 30, பிரதான வீதி, ஆனந்தபுரி |
| புருஸ்லி சதுர்ஷன் | 224/*B*, உட்துறைமுக வீதி, உவர்மலை |
| சந்திரன் மனோஜன் | ஈச்சந்தீவு – 3, கிண்ணியா |
| கனகசபை விசாகரன் | 949, முருகன் கோவில் வீதி, பாலையூற்று |
| சிவசுந்தரன் சுதெஸ்வரன் | 32, மயானவீதி, அன்புவழிபுரம் |
| சன்முகநாதன் டனுஸ்காந் | 59/7, பூம்புகார் கிழக்கு, பாலையூற்று |
| சந்திரசேகரம் லக்ஷன் | புதுக்குடியிருப்பு, தம்பலகாமம் |
| மதியழகன் சதுர்ஷன் | சம்பூர் - 2, மூதூர் |
| கீர்த்தனா தெய்வேந்திரன் | 1204, பாலையூற்று |
| விதுஷிகா கோணேஸ்வரன் | இல 48/166, கண்டி வீதி, விநாயகபுரம் |
| நோஜிகா மதிவண்ணன் | 297, அன்புவழிபுரம் |
| போஜினி மகேந்திரராஜா | 225, காந்திநகர், அன்புவழிபுரம் |
| கோகுலகவி கணேஸ் | 56/36, புளியங்குளம், அலஸ்தோட்டம் |
| சாரியா அம்பிகைபாலன் | 19, கண்டி வீதி, மட்டிக்களி |
| பினுசாந்தினி காளிராசா | 296/2, *ELB*3, அங்கபுரம், கிளிவெட்டி, மூதூர் |
| ஹாஷினி அஜித்குமார் | 749/82, தபோவனம் வீதி, கேணியடி |
| சதுர்ஷனா ராஜேஸவரசர்மா | 75, ஹஸ்கிசன் வீதி, திருகோணமலை |
| சப்தனா விக்னேஸ்வரன் | 222, 1வது ஒழுங்கை, ஆனந்தபுரி |
| கிருஷிகா தில்லைநாதன் | கூனித்தீவு – 08, மூதூர் |
| ரொஷெல் திலீபன் | 700, அன்புவழிபுரம் |
| கதுர்ஷிகா ஜெகநாதன் | சின்னக்குளம், ஈச்சிலம்பற்று |
| பிரியங்கா சௌந்தரராசன் | 684, அண்ணா வீதி, அன்புவழிபுரம் |

கலைப் பிரிவு

| முழுப்பெயர் | முகவரி |
|---|---|
| தங்கராஜா சிவசங்கர் | 16/28, உவர்மலை |
| ஜீவாநந்தன் பவித்திரன் | 28/7, உவர்மலை |
| லிங்கேந்திரன் திபேஸ்வரன் | 41, சாம்பல்தீவு, திருகோணமலை |
| நாகராசா ருஜிந்தன் | தம்பலகாமம் |
| துரேஸ்வர் டினேஸ்ராஜ் | கங்கவேலி, மூதூர் |
| தவலோஸன் தேவமதுஸன் | முதலிக்குளம், பன்குளம் |
| தெட்சனாமூர்த்தி சருஜன் | சம்பூர், மூதூர் |
| ஞானேஸ்வரன் கோகுல் | கிளிவெட்டி |
| சௌந்தராஜா தனுஷாந் | 02, குச்சவெளி |
| மதுமிகா சதானந்தசிவம் | 24/2, உவர்மலை |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| கர்ஷிகா ராஜசிங்கன் | 24/6, லிங்கநகர் |
| சௌமியா சாந்தகுமார் | 63, செல்வநாயகபுரம் |
| சதுர்ஷிகா சுந்தரலிங்கம் | 33/41, சிவபுரி |
| சஜித்தா யோகராஜா | 531, செல்வநாயகபுரம் |
| சப்தவி தமிழழகன் | 32, உவர்மலை |
| நுவாசஹரி சிவனேசன் | 29, அன்புவழிபுரம் |
| கிர்ஷானி கணேசலிங்கன் | 24/5D, உவர்மலை |
| சேசபிரியா நவநந்தன் | 166/IP, உவர்மலை |
| பக்ஷலா அருள்சந்திரன் | தம்பலகாமம் |
| லக்ஷாயினி சந்திரசேகர் | 17/17, அன்புவழிபுரம் |
| டிலக்ஷனா துஷ்யந்தன் | முதலிக்குளம், பன்குளம் |
| கிருத்திகா கிருபாகரன் | 2, இரண்டாம் வாய்க்கால், பன்குளம் |
| சுதேஷ்கா சிவலிங்கம் | D2, பன்குளம் |

## பொறியியல் தொழில்நுட்பப் பிரிவு

| முழுப்பெயர் | முகவரி |
|---|---|
| சிவகுமாரன் சிவநேசன் | 17/10A, அம்போட் வீதி, அன்புவழிபுரம் |
| பரமசிவம் பொதவியன் | 230, 1வது ஒழுங்கை, அன்புவழிபுரம் |
| நாகேந்திரம் ரஜீவன் | 70/46, திருச்செல்வம் வீதி, லிங்கநகர் |
| தர்மராஜன் நர்மதன் | 151/5, லோவர் வீதி, திருகோணமலை |
| ஜேசுதாஸன் டோகேஷன் | 1190, பாலையூற்று |
| சுதேஷ்நாதன் சந்தோஷ் | 36/59, சுமேதஹம, திருகோணமலை |
| பிரபாகரன் பிரதீபன் | 2ம் வட்டாரம், சல்லி, சாம்பல்தீவு |
| சிறிதரன் நதீஸன் | 55, திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை |
| பாலஹிறிஷன்.திவாகர் | 54/5, மத்திய வீதி, திருகோணமலை |
| வன்னியசிங்க லாமுவேல் மிஷாஜ் | 847, செல்வநாயகபுரம் |
| ஜோனேந்திரா ஸ்டீபன் | 162/3, லோவர் வீதி |
| ரஞ்சன் தனுசில்க் | 13/37, பாலையூற்று |
| சிறிதரன் சன்சிதன் | வித்தியாலையம் வீதி, திருகோணமலை |
| பசுபதி கஜிதரன் | 560, செல்வநாயகபுரம் |

## உயிரியல் தொழில்நுட்பப் பிரிவு

| முழுப்பெயர் | முகவரி |
|---|---|
| ஆந்தோனி சுலக்ஷன் | 11/11, சென்யோட் வீதி, பாலையூற்று |
| ஜெயபாலன் ஜெயந்தன் | செல்வா வீதி, இறால்குழி, மூதூர் |
| சத்தியசீலன் சதுஷ்ரிகன் | 783, பிரதான வீதி, ஈச்சந்தீவு – 03, கின்னியா |
| உதயசங்கர் நசிகேதன் | 26, மகேசர் வீதி, திருகோணமலை |
| இரவிந்திரன் ஜிகான் பிரகீத் | 52, மகேசர் வீதி, திருகோணமலை |
| கபிலோஜினி கரிஷ்டன் | விநாயகர் வீதி, பட்டித்திடல், தோப்பூர், மூதூர் |
| காருண்ணிய முரளீகரன் | 44, கந்தையா வீதி, திருகோணமலை |
| மதுமிதா மதிவண்ணன் | 993, செல்வநாயகபுரரம், திருகோணமலை |
| ரக்ஷனா வரதராஜன் | 155, செல்வநாயகபுரம், திருகோணமலை |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைப்பாடவிதான சாதனையாளர்கள் விபரம் – 2021

திருகோணமலை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் நடாத்தப்பட்ட "*DO You Know*" *Quiz* போட்டியில் வெற்றியீட்டியோர்

1ம் இடம் (தொழில்நுட்பப்பிரிவு)

1. U.Nasikethan
2. P.Piratheepan
3. S.Shanthosh
4. V.Rakshan
5. M.Mathumitha

2ம் இடம் (கணித, விஞ்ஞானப் பிரிவு)

1. B.Jhyogatharshan
2. J.Danushigan
3. E.Naveenkumar
4. N.Amshika
5. T.Lakshana

2ம் இடம் (வர்த்தகப் பிரிவு)

1. K.Vijitharan
2. M.Nojika
3. T.Keerthana
4. G.Kokulakavi
5. A.Saarana



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த உயர்தர பிரிவு மாணவர்களிற்கு கற்பித்த ஆசிரியர்கள் விபரம் – 2021

| Name | Subject |
|---|---|
| Mr.C.Deogupillai | English |
| Mr.S.Kamaleswaran | Combine Maths |
| Mr.N.Umashankar | ICT |
| Mr.V.Suntharajan | Tamil |
| Mr.P.Konalingam | Accounts |
| Mrs.T.Gangatharan | Geography |
| Mrs.A.Kantharupan | Accounts |
| Mr.S.Thirumaran | Music |
| Mrs.P.Umamaheswaran | Agriculture |
| Mr.S.Sivashannkaran | Biosytem Technology |
| Mr.A.Akilan | ICT |
| Mrs.K.Mayuri | ICT |
| Mr.B.Nirmalathasan | Chemistry |
| Mr.R.Ketheeswaran | Physics |
| Mr.S.Baskaran | Business Study |
| Mrs.T.Ranjanan | English |
| Mrs.R.Jeyakanthan | English |
| Mrs.K.Jeyabalini | Biology |
| Mrs.V.P.Birunthuja | ICT |
| Mrs.R.Baheerathy | ICT |
| Mrs.S.Subas | Science for Technology |
| Mrs.D.Srikanthan | Dance |
| Mr.T.Rajkamal | Drama |
| Mrs.S.Thushyanthan | Hinduculture |
| Mr.N.Thanusan | Engineering Technology |
| Mrs.C.Anusha | Music |
| Rev.Sr.B.F.Barthelet | English |

## விசேட தினங்கள்

1. நுகர்வோர் பாதுகாப்புத் தினம் - *March* 15
2. முயற்சியாண்மை தினம் - *April* 16
3. உலக சுற்றாடல் தினம் - *June* 05
4. தொடர்பாடல் தினம் - *May* 17
5. தேசிய தொழில்நுட்ப தினம் - *May* 11
6. புவி தினம் - *April* 22
7. உலக அஞ்சல் தினம் - *October* 09
8. தேசிய உற்பத்தி தினம் - *Febuary* 16
9. கூட்டுறவு தினம் - *March* 16
10. இலங்கை தரக்கட்டளைகள் தினம் - *October* 14
11. உலக அனர்த்த தினம் - *October* 14

*வர்த்தகப்பிரிவு மாணவர்கள் (2022)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயமுயற்சியே எதிர்காலம்

க.பொ.த உயர்தரத்தில் காலடிவைக்கும் ஒவ்வொரு பிள்ளைகளும் தமது நேரத்தையும் எதிர்கால நோக்கையும் கருத்திற் கொண்டு கால்தடத்தை எவ்வாறு நகர்த்த வேண்டும் என்ற விடயத்தை அவர்களின் கல்விநிலை, கற்றல் வழிகள் தொடர்பாக முன்வைக்கின்றேன்.

க.பொ.த உயர்தரம் என வரையறை செய்யப்பட்டுள்ள இலக்கத்திற்குள் நுளைந்த மாணவர்கள் உச்சநிலைப்பயனைப் பெறும் நோக்குடன் ஏதோ ஒரு துறையைத் தெரிவு செய்கின்றனர். இவர்களின் கல்விப்பயணத்தில் மூன்று விதமான மாணவர்களை சந்திக்க நேரிடுகிறது. ஒன்று தமக்கென பொருத்தமான இலக்கினைத் தெரிவு செய்து ஓயாது உழைப்பவர்கள். இரண்டாவதாக ஆசிரியர்கள் அல்லது பெற்றோர்களின் உந்துதலுடன் முயல்பவர்கள். மூன்றாவது முயற்சிகளை மேற்கொள்ளத் தவறுபவர்கள் எனக் காணப்படுகின்றனர்.

எமது நாட்டின் கல்விக்கட்டமைப்பில் பல ஏமாற்றங்களும், நிறைகுறைகளும் இருப்பது தெளிவானது. எவ்வாறாயினும் உயர்தரத்தினை கற்றுதேறவுள்ள மாணவர்கள் அனைவருக்கும் ஏட்டுக்கல்வி ஆதிக்கம் செலுத்தும் எழுத்துப் பரீட்சை என்னும் தடையை தாண்ட வேண்டிய கடைப்பாடுள்ளது.

உயர்தரக் கல்விக்காலத்தை இரு வேறு நோக்கங்களுக்காக வகைப்படுத்தலாம் 1ம் வருடத்தில் எத்துறை சார்ந்த மாணவரானாலும் சரி பாடத்தின் ஆழ, அகலத்தை புரிந்து பாடம் தொடர்பான பரந்த அறிவை வளர்த்துக் கொள்ளல். 2ம் வருடம் முறையான தயார்படுத்தல் என்று கருதலாம். இதன் மூலம் அவரின் ஆரம்ப வருடத்திலேயே அத்துறையின் பலம், பலவீனங்களை நன்றாக அறிந்து தனக்கென்ற சுயவிருப்பத்தினை ஏற்படுத்த முயலவேண்டும். இக்காலப்பகுதியில் பாடசாலையில் கலைத்திட்ட *(Carriculer)* மற்றும் இணைப்பாடவிதான *(Co – carriculer)* செயற்பாடுகளில் ஆர்வத்துடன் ஈடுபாடுள்ளவர்களாக திகழவேண்டும். இரண்டாம் வருடத்தில் கற்றவிடயங்களை அடிப்படையாக் கொண்டு தவணைப்பரீட்சை, பொதுப்பரீட்சை என்பவற்றுக்கு தன்னைத் தயார்படுத்த வேண்டும்.

பலவருடங்களாக உயர்தர மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர் என்ற வகையில் மாணவர்களின் கல்வி நிலையில் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய ஒரே ஆயுதம் "சுயகற்றல்" இது தற்கால உயர்தர மாணவர்களிடையே இல்லாமையும், மிகக்குறைவான நேரத்தை ஒதுக்குகின்றமையும் காணமுடிகின்றது. பாடசாலை, பிரத்தியேக வகுப்பு, நிகழ்நிலைக் கற்றல் ஏனைய சுய தேவைகளுக்காக அதிக நேரத்தை செலவிடுகின்றனர். **"கற்பித்தல்"** என்பது ஆசிரியர் அறிவை வழங்க முயல்வதாகும் அதனை மாணவன் இறுகப்பிடித்துக் கொண்டு தனது நிலையினை மாற்றியமைத்தல் பரீட்சைக்கு தயாராதல் என்பவற்றை மேற்கொள்ள வேண்டும் இன்று கற்பித்தலை தேடி ஓடும் மாணவர்கள் **கற்றல்** என்னும் கூரிய ஆயுதத்தை தாமே வைத்துக்கொண்டு பயன்படுத்த தவறுகின்றனர்.

**சுயகற்றல்** என்பது நான் மேலே குறிப்பிட்ட **பல்வேறு இடங்களிலிருந்து அறிந்து கொண்ட வெவ்வேறு விடயங்களையும் தொகுத்து தனக்கேற்ற வகையில் குறிப்பாக்கி அதனை அவற்றிற்கான பயிற்சிகளை மேற்கொண்டு கற்றறிந்த விடயங்களை ஒழுங்குபடுத்துவதாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை விடுத்து மேசையில் அதிகளவு நேரத்தை செலவழித்து தெளிவான நோக்கம் இன்றி பல்வேறுபட்ட விடயங்களில் புலனை செலுத்தவதல்ல. சுயகற்றலுக்காக மாணவர்கள் சில திட்டங்களை பின்வரும் அடிப்படையில் ஒழுங்குபடுத்த வேண்டும்.

1. பொருத்தமான சூழல்
   - அமைதியான இடம்
   - மேசை துப்பரவாகவும் தேவையான பொருட்கள் ஒழுங்காக அடுக்கப்பட்டிருத்தல்
   - காற்றோட்டம், வெளிச்சம் போன்றவை முக்கியமானவை
2. பொருத்தமான நேரம்
   - அதிகாலை, இரவு என இரண்டு வேளையும் எதனை கற்க வேண்டும் என தெரிவுசெய்து கற்றல்
   - நேர இடைவெளியுடன் சிறிய சிறிய உடற்பயிற்சியளித்துக் கற்றல்
   - ஓய்வு நேரச் செயற்பாட்டை பொருத்தமானதாக தெரிவு செய்தல்
3. சுயகற்றலுக்கான விருப்பத்தை உருவாக்குதல்
   - ஊக்கமூட்டும் பாடல், பேச்சு, சொற்பொழிவுகளைக் கேட்டல்
   - பொருத்தமானவர்களுடன் உரையாடி நல்லார்வத்தை வளர்த்தல்
   - எளிமையான / இலகுவானவற்றில் இருந்து ஆரம்பித்தல்
   - எதிர்காலத்தில் எய்தும் நல்லவிளைவுகளைச் சிந்தித்தல்
4. நேரசூசி அமைத்தல்
   - பாடசாலை, தனியார் வகுப்புக்கள் போலல்லாது வீட்டில் நேரசூசியை ஒவ்வொரு நாளிற்கும், வாரத்திற்கும், மாதத்திற்கும், பரீட்சையை மையமாக கொண்டு அமைத்துக்கொள்ள வேண்டும்

இவ்வளவு நடவடிக்கைகளையும் மேற்கொண்ட ஒருவர் செயற்பாட்டில் ஈடுபட்டால் எல்லாமே கனவாகிவிடும்.

மாணவர்களின் சுயகற்றலுக்கான செயற்பாடுகளாவன

- கற்கப்பட முன்னரே பாடப்பரப்பை அறிந்துகொள்ளல்
- பாடசாலை, பிரத்தியேக வகுப்பு நிகழ்நிலைக்கற்றல் என்பவற்றில் கற்பது தொடர்பாக குறிப்பெடுத்து ஒரே பக்கப்பார்வையாக்கல்
- சுருக்கக்குறிப்பை மீண்டும் வாசித்தல்
- சகபாடிக்குக் கற்பித்தல்
- பொருத்தமான நேரம் கற்றவற்றை பிரயோகித்தல்
- காலத்திற்கு காலம் மீட்டல்
- நேரமுகாமைத்துவம் - பிற வேலைகளை விரைவுபடுத்தல்
- ஓய்வு நேரத்தைப் பயனுள்ளதாகக் கழித்தல் (மரம் வளர்த்தல், செல்லப்பிராணி, சுற்றாடல் கழகம், விளையாட்டு)

**தெய்வத்தாலாகாதெனினும் முயற்சிதன் மெய்வருந்தக் கூலி தரும்** என்பதற்கிணங்க. இவ்வாறு சுயகற்றலில் ஈடுபடும் மாணவர்களுக்கு உயர்தரப் பரீட்சை போட்டிப் பரீட்சை என்ற சவாலுக்கு எளிதாக முகங்கொடுத்து வெல்ல முடியும். உயர்தரப் பரீட்சை வெற்றி ஒரு மாணவனை முழு மனிதனாக்கிவிடாது. அத்துடன் உயர்தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்திரம் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதில்லை என்ற எண்ணப்பாடு இருந்தாலும் 17-19 வயதுப் பருவ மாணவர்களுக்கு எதிர்காலத்தை சிறப்பாக ஒழுங்கமைக்க உயர்கல்வியில் கிடைக்கும் வாய்ப்பை முறையாகப் பயன்படுத்தி வெற்றிபெற வேண்டும் இனிவரும் சந்ததியினராவது சுயகற்றலின் முக்கியத்துவத்தை உணர்ந்து தமது எதிர்காலத்தை மிளிரவைக்கட்டும் என வாழ்த்துகிறேன்

*திருமதி.க.ஜெயபாலினி*
*பகுதித்தலைவர்*
*உயர்தர கணித, விஞ்ஞானப் பிரிவு*

---



## சுமை

மனிதா!
சிந்திக்காத வரை
உன் மூளை தலைக்குச் சுமை!
பயன்படாத வரை
உன் பணம் பெட்டிக்குச் சுமை!
துணிவு இல்லாத வரை
உன் பயம் வெற்றிக்குச் சுமை!
உழைக்காத வரை மனிதா நீ
உலகிற்குச் சுமை!

*ஜெ. டிலிஷியா (2023 உயிரியல்)*

---

## சிந்தனைத்துளிகள்

- ஒரு சதம் கூட இல்லாதவனை ஏழை என்று நினைத்துவிடதீர்கள். வாழ்க்கையில் ஒரு கனவுகூட இல்லாதவன் தான் ஏழை மனிதன்
- வெற்றிக்கு அவசியமான காரணிகளில் தலையாயது விடமுயற்சி. விடமுயற்சி எதையும் வென்றுவிடும் இயற்கையைக் கூட
- ஒருவன் தேட வேண்டிய ஒரே அதிஷ்டம் வாழ்க்கைக்கான குறிக்கோள். அதை வெளியே தேடினால் கிடைக்காது. அதை தனது மனதுக்குள் தேடினால்தான் கிடைக்கும்
- தோல்வி என்பது உங்களுக்குள்ளிருந்து மட்டுமே வரமுடியும். வெளியிலிருந்து தோல்வி வருவது சாத்தியமே இல்லை.
- பலவீனமான இலக்குத்தான் உங்கள் முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கமுடியும்.
- உங்கள் எதிர்காலத்தின் அவசியம், உங்கள் அன்றாட வேலை முறையில் ஒளிந்திருக்கின்றது.
- தகவல் தெளிவாக இருந்தால் முடிவுகள் தானாக வந்து குதிக்கும்
- அறிவே சக்தி, அறிவைப் பகிர்ந்துகொள்வது மகத்தான சக்தி

*சு.கவிநயா (2023 உயிரியல்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வின் மிகச் சிறந்த போதனை

கற்றலின் சாரமே நற்பண்புடையவராதல் தான் என்ற அனுபவத்தை ஏற்படுத்தித் தருவது இந்தப் பாடசாலைக் காலம் தான். ஆனால் அனைத்தையும் ஆட்டிப்படைத்த தொற்று அதனையும் விட்டுவைக்கவில்லை. எல்லோரையும் போல எங்களைத்தான் அது அதிகம் பாதித்தது என்று நானும் நினைத்துக்கொண்டிருந்தேன். இந்த சிந்தனையிலேயே சிக்கி உள்ளம் கல்வியை விட்டு வெகு தொலைவு செல்லும் வேளையில் ஏறத்தாழ ஒரு வருடங்களுக்கு பின்பு அந்த எண்ணத்தை மாற்றுவதாய் அமைந்தது அந்த அறிவுரை.

அன்று அறிவியல் வாழ்வியல் கற்பித்துக்கொண்டு இருந்தது. எங்களுக்கு அறிவியல் பாடம் ஆரம்பம் அதோடு கூட வழமைபோல் அறிவுரைப் பாடமும் ஆரம்பம். ஆனால் வழமைக்கு மாறாக இன்று அறிவுரை கதையுடன் தொடங்கியது. வேடன் ஒருவன் காட்டுக்குச் செல்கிறான் அங்கே ஒரு அழகிய மானைக் காண்கிறான். அதனைப் பிடிக்கும் நோக்குடன் அதனை விரட்டியபடி செல்கிறான். மான் காட்டை நோக்கி விரைகிறது. ஆனால் காடு தீப்பற்றி எரியவே கண நேரம் ஒரு மரத்தின் அண்டை சரணடைகிறது. ஆனாலும் தன்னம்பிக்கையோடு மறு புறத்தால் ஓட எண்ணி காலடி எடுத்து வைக்கிறது. ஆனால் காட்டில் இருந்து வெளியே வந்த சிங்கம் ஒன்று அங்கு கர்ச்சித்தபடி நிற்பதைக் கண்டு அஞ்சுகிறது. மறு புறமோ வானம் இருண்டபடி பெரும் முழக்கத்தை உண்டு பண்ணுகிறது. கலங்கிய மானினால் ஒரு அடியேனும் நகர்த்த முடியவில்லை. காரணம் அது ஒரு நிறை மாத கர்ப்பிணி. இப்புறம் பார்த்தால் வேடன் அம்புடன், மறுபுறம் பார்தத்தால் சிங்கம், ஒரு புறம் இதயம் வெடிக்கக்கூடிய அளவுக்கு இடி இடிக்கிறது, ஒரு புறம் அதன் பிரசவ வலி. அதனைச் சூழ பிரச்சினைகளின் மொத்த வடிவம் உருவெடுத்திருந்தது. அந்த நேரத்திலே கற்பனைக்கு மட்டுமே உரிய அசரீரி கேட்கிறது. "இந்த நேரத்தில் உனது கடமையை செய்" இந்த நேரத்தில் அந்த மானுடைய கடமை என்ன? தனது குட்டியை ஈனுவது. ஆகவே அது இத்தனை துன்பங்களுக்கும் மத்தியில் தனது கடமையை செய்து முடிக்கிறது. இதைக் கண்ட வேடனின் உள்ளத்திலே அதன் மீது கருணை ஏற்படவே, அவனுடைய கையில் இருந்த அம்பின் குறி மானை வேட்டையாட முனைந்த சிங்கத்தை நோக்கித் திரும்பியது, கோபமடைந்த சிங்கம் வேடனைத் துரத்தியது. முழங்கிய வானம் "சோ"வெனப் பொழிந்தது, தீயும் அணைந்தது. இப்பொழுது மானுக்கு சிக்கல்கள் அனைத்தும் தீர்ந்தன. தனக்கு இயற்கை விதித்த கடமையை அந்த நேரத்திலே சரிவர செய்ததினால் மானின் உயிர் காக்கப்பட்டது. இந்தக் கதை எனக்கு இரு சாரங்களை கொடுத்தது. ஒன்று அசரீரி என்பது கடவுளால் கூறப்படுவது மட்டுமல்ல. இதைப் போன்ற நல் எண்ணங்களை விதைப்பவர்களின் வார்த்தைகளும் கூட தான். இரண்டு எங்களுடைய கடமைகளைச் சரிவரச் செய்கின்றபோது எங்களிடம் எந்தவித எதிர்பார்ப்போ, எந்தவிதக் கவலைகளோ ஏற்படப்போவதில்லை. தமிழ் பேராசிரியர் திருமதி பர்வீன் சுல்தானா அவர்கள் கூறுவார்கள் "அமைதி என்பது நம்மைச் சுற்றியுள்ள எல்லோரும் அமைதியாக சமாதானத்துடன் வாழ்வது அல்ல, எம்மைச்சூழ்ந்து எது நிகழ்ந்தாலும் எப்படிப்பட்ட இன்பங்களோ, அல்லல்களோ எது நேர்ந்தாலும் எங்களுடைய உள்ளத்தை சஞ்சலம் இல்லாது வைத்திருப்பதுதான் உண்மையான அமைதி". இந்த அமைதி எங்களுக்கு எப்போது கிடைக்கிறது என்றால் எங்களுடைய கடமைகளை நாங்கள் சரிவர செய்யும் போது மட்டுமே ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் மிகச்சிறந்த சொல் செயல் என்பார்கள். அதே வேளை மிகச் சிறந்த செயல் என்னவென்றால் கடமையை ஒழுங்காக செய்துமுடிப்பது. இதுவே என்னுடைய செயற்பாடுகளில் பெரிதும் மாற்றத்தைக் கொணர்ந்த மிகச் சிறந்த போதனை

**'ஊறொரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்**
**ஆற்றென்பர் ஆய்ந்தவர் கோள்"**

- திருக்குறள் -

*E.J. சதுசன் (2022 உயிரியல்)*

---

## உயிர் தந்த உயிரே

அம்மா இல்லாமல் உயிர் ஏதும் இல்லை
அன்பின்றி இங்கு உயிர் வாழ்வும் இல்லை

எனக்கென்று உயிர் தந்தாயே
என் வாழ்வெல்லாம் நீ நிறைந்தாயே

அம்மா அம்மா உயிரம்மா
உலகம் எல்லாம் நீயம்மா – எனக்கு
உயிர் தந்த தாயம்மா
உயர்வாய் வாழ வழியம்மா



உயிரில் என்றும் கலந்தவளே
உயிருக்கு உயிராய் நின்றவளே
உண்மை விளக்காய் ஒளிர்பவளே
ஒழுக்கம் சொல்லித் தருபவளே

கருணைக் கடலாய் மலர்ந்தவளே
கடவுளுக்கு இணையாய் சுடர்பவளே
கட்டியணைத்துக் காப்பவளே – எம்
கவலைகள் யாவும் தீர்ப்பவளே

தாயே யாவும் நீயம்மா
தயவின் இல்லம் தானம்மா
உன்னைத் தொழுது எழுந்தாலே
உள்ளத்துயர் ஓடிவிடும்

*த.தர்ஷா (2023 கலை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரித்திரம் உன்னைப் பேசட்டும்...

காலம் உனக்காக காத்திருப்பதில்லை கடந்து போய்க்கொண்டேயிருக்கும். நீயும் காலத்தினூடாகப் பயணம் செய். தாமதிக்காதே, ஒவ்வொரு வினாடி நீ தாமதிக்கும் போதும் பல மணி நேரங்கள் பின்னோக்கிச் செல்வாய். உன்னைக் கடக்கும் அனைத்தும் உனக்காக காத்திருக்கப்போவதில்லை.

இளைஞனே! விழித்துக்கொள் உன்னைக் கடந்து செல்பவன் உன்னையும் பொருட்படுத்துவதில்லை ஆனால் நீயோ, அடுத்தவனை ஆராய்ந்து கொண்டிருக்கிறாய். அந்தப் பழக்கத்தை கைவிடு. முதலில் நீ ஆராய வேண்டியது உன்னை மட்டும்தான் ஏனென்றால் உனக்குள் ஆயிரம் அற்புதங்கள் மறைந்துகிடக்கின்றன. அவற்றை ஆராய்ந்து பார் நீயே அதிசயிப்பாய்! அர்தமே இல்லாத விடயங்களுக்காக அங்கலாய்க்காதே, அவை ஒரு பக்கம் கிடக்கட்டும் உன் அடுத்த அடியை எங்கே வைப்பது? எப்படி வைப்பது? சிந்தித்துச் செயற்படு.

“குஞ்சி (சிகை) அழகும் கொடுத்தானைக் கோட்டழகும் (ஆடை) அழகல்ல” என்பது ஆன்றோர் வாக்கு. அதைப் புரிந்துகொள். அப்படியென்றால் எது அழகு? கல்வியினால் வரும் அழகே அழகு. இதுதான் உண்மை. இப்போது உன் மனம் இதை ஏற்க மறுக்கும் ஆனால் நீ ஏற்க நினைக்கும்போது, உலகம் உன்னை மறுத்திருக்கும். அப்போது நீ திரும்பிப்பார்த்ததால் உன்னோடு சேர்ந்து பயணிப்பதாக கருதிய யாருமே உனக்குப்பின்னால் இருக்கமாட்டார்கள். எல்லோரும் முந்திச்சென்றிருப்பார்கள் அல்லது எங்கோ? மறைந்திருப்பார்கள். நீயோ! தனித்துவிடப்பட்டதாக உணர்வாய்! உனது இயங்கு நிலையில் தடுமாற்றம் வரும். அந்நிலையால் நீ இயங்கா நிலைக்குச் செல்வாய்.

நீ கற்றுக்கொண்டவை ஏராளம். ஆதைவிட கற்க வேண்டியிருப்பவை ஏராளம். கற்றது கைமண் அளவு என்பார்கள். நீ கற்றதைக் கொண்டு இக் காசினியைக் கூட ஆள முடியும். முதலில் அதன் பெறுமதியை நீ புரிந்து கொள். உன் புரிதலில் தான் எல்லாமே இருக்கிறது. உன்னை நீ புரியாத வரையில் உலகம் உன்னை அறியாமலே இருக்கும். நீ அறிந்ததும், அறிந்துகொண்டிருப்பதும் மட்டுமே உலகம் என்றிருக்காதே அவற்றிற்கும் அப்பால் தான் உலகமே இருக்கின்றது.

இளைஞனே! முயல், ஆமையால் தோற்ற கதை உனக்குத் தெரியும். பலர் முயலாமையால் தான் தோற்றே போனார்கள் என்பது உனக்குத் தெரியாதா?

தெய்வமே மனமிரங்கா விட்டாலும் மெய் வருந்திச் செய்யும் முயற்சிக்கான கூலி கிடைக்கும் என்பார் வள்ளுவர். எனவே முயன்று பார். சாதனையாளர்களின் வாழ்க்கைப் பக்கங்களை சற்றுத் தட்டிப்பார் சங்கடங்களும் வலிகளும் இன்றி முயற்சியின்றி முடங்கிக் கிடந்தவன் சாதித்ததாக சரித்திரமே இல்லை. காத்திருக்கும் வரை உன் பேர் காற்றென்றே இருக்கட்டும் புறப்பட்டுவிட்டால் புயலென மாறிவிடு என்றார் கவிஞர் ஒருவர். நீயும் அப்படியே இரு சோம்பியிருக்காதே சோம்பல் உன்னை சோகத்துள் தள்ளிவிடும்.

விதைக்குள் முளை நீ உறங்கிக்கிடக்காதே. விருட்சமாய் நிமிர்ந்தெழு. உன் நிழலில் ஆயிரம் பேர் வாழ்வு பெறுவார்கள். உன்னால் முடியும் நம்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையோடிரு. செயல்படு சாதிப்பாய், சாதனையின் உச்சம் தொடுவாய் சங்கடங்களுக்கு வாய்ப்பளிக்காதே.

அன்புக்குரிய இளைஞனே! அமைதியாக இரு அவதானித்துக் கொண்டிரு, அவசியமானவற்றை மட்டும் செய், அர்த்தமுள்ளதாகப் பேசு. சாதித்தவர்களில் பெரும்பாலானோர் சாதாரண குடும்பத்தில் தான் பிறந்தவர்கள். அவர்களின் சாதனைகளிற்குப் பின்னால் இடி, மின்னல், மழை, புயல், பூகம்பம் என எல்லாமே நிகழ்ந்திருக்கும். அத்தனையும் கடந்து வெற்றிச் சிகரத்தை தொட்டவர்களே சாதித்தவர்கள். சோம்பியிருக்காதே, சோதனைக்குப் பயப்படாதே, “பயம்” உன்னைப் பாதாளத்துள் தள்ளிவிடும். தவறு நிகழ்ந்தால் திருத்திவிடு. தவறுகள் உன்னை தடம்மாற்றக்கூடாது. பாதை அறிந்த பின்பே பயணத்தைத் தொடரு.

பயண வழியில் வரும் இடர்களைக் கண்டு துவண்டு விடாதே. சாதனையாளன் எப்போதும் சமயோசிதமாக முடிவெடுப்பான். நீ சாதனையாளன் சாதிக்கப்பிறந்தவன் சர்வமும் உன் மனதுக்குள் தான் அடக்கம். முயன்றால் முடியாதது என்று எதுவுமில்லை. ஆகவே உன் மனதைப் பத்திரப்படுத்து.

வாழ்வை மகா சோதியாக்குவதும் இருளாக்குவதும் மனமே. மனதைப் புரிந்து வாழப்பழகு. அதை உன்வசப்படுத்து நீயே கட்டளை இடுபவனாக இரு. மனதின் கட்டளைக்குப் பணிபவனாக அல்ல.

மீண்டும் கூறுகிறேன் நீ விதைக்குள் முளை விழுது விட்டு நிமிர்ந்திரு. சரித்திரப் பெருமைகளை நீ பேசிக்கொண்டு திரியாதே. சரித்திரம் உன்னைப் பேசட்டும்.

வாழ்க வையகம்
வாழ்க வளமுடன்

*திரு. வே.சுந்தரராஜன். MA (தமிழ்), SLTS – I*
*தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி*

---

## என் அன்புத் தாய்



பழத்தில் உள்ள விதை போல
பத்துமாதம் உன்
கருவறையில் பாதுகாப்பாய் என்னைச்
சுமந்தவளே - இப்
பாரினிலே போற்றத் தகுந்தவள் நீயே

உன் பசி பாராது – என்றும்
உன் உதிரத்தை பாலாக்கி
என் பசி தீர்த்தவளே
என்றும் உயர்ந்தவள் நீயே

முழு மதி பார்க்கும் முன்
நான் பார்த்த முதல் மதி
உன் முகம் அம்மா
உலகோசை கேட்கும் முன்
நான் கேட்ட முதலோசை
உன் குரல் அம்மா

அன்பிற்கு இலக்கணமும் நீயே
இவ் அகிலத்திற்கு ஒளி விளக்கும்
நீயே
ஆயிரம் பொன் கொட்டினாலும்
ஆகாது உன் அன்பிற்கு ஈடு தாயே

*ஜெ.டிலிஷியா (2023 உயிரியல்)*



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## "ஒற்றை மந்திரம்"

கல்லூரி நதியின்று
பொங்கிப் பிரவாகிக்கிறது...

நீர் வரைந்த
நீள் அலைகள் - இன்று
நின்றாடிக் குதுகலித்து
ஆனந்த வெள்ளம்
போட்டுநிற்கிறது..

ஆயிரமாயிரம் கனவுகள் சுமந்து
அடுத்தொரு தடைதாண்டலுக்காய்
ஆர்ப்பரித்து நிற்கின்றது.

வெள்ளை நிறச் சீருடை —
ஆசிரியரின்
விரல்பிடித்த பிஞ்சு நடை
துள்ளிப் பழகிய வகுப்பறை
அள்ளிப்பருகிய நட்பு..
முகவரி தந்த மேடையேற்றம்..
முப்பது பேரும் அருந்திய
ஒற்றைச்சாப்பாடு..
செல்லச் சீண்டல்கள்...
மெல்லச் சிந்திய காதல்..

நீங்கள்
கொண்டாடிய காலங்கள்
திண்டாடிய பொழுதுகள் - இனி
அண்டாதே உங்களை...

கன்றுடன் பசுவாகி
அன்றில்போல் ஒன்றிவாழ்ந்து

சிறகசைக்கும் பறவைகளே
சென்று வாருங்கள்!
வென்று வாருங்கள்!

அஞ்சி அஞ்சிப் புகுந்த
கல்லூரிக்காலம் - இன்று உங்களை
கொஞ்சி விடைகொடுக்கிறது.
கெஞ்சிக் கேட்டாலும்...
இத்தனை இனிமைகளுடன் - இனி
வருவதற்கில்லை.

கல்லூரிக்காலம் ஒருவழித் தாக்கம் -
அது
கனவுகளின் தொகுப்புரை
இன்று முடிவுரையாகும்
இந்தக் கருவறை
ஒருமுறை மட்டுந்தான்!

ஆனால்...
அத்தனையும்
மீண்டும் பிறப்பெடுக்கும்
ஒற்றை மந்திரம்
"என் பள்ளிக்காலம்.."

என்றேனும் ஒருக்கால்
உச்சரித்துப் பாருங்கள்
உச்சி குளிரும்...

- கொட்டிய ஆரன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனித்துவமே மனித குலத்தின் மகத்துவம்

உலகில் பல்கோடி மக்கள் இருந்தாலும் ஒருவர் மற்றவரைப் போல இருப்பதில்லை. ஒரே கருவில் உதித்த இரட்டையரானாலும் தனித்துவமான கைரேகை நித்தியமானதாய் திகழ்வது இறைவன் படைப்பின் விந்தை. நவரத்தினங்கள் ஒவ்வொன்றும் சிறப்பு தன்மைப் பெற்றதைப் போன்று மனிதர்களும் தங்கள் தனித்தன்மையால் பலகோடி இரத்தினங்களாக பிரகாசிக்கின்றனர்.

விவசாயம், பொறியியல், மருத்துவம், கல்வி போன்ற துறைகளில் மக்கள் சமூகத்தின் ஒரு பகுதியாக இயங்கும் நிலையில், தன்னிகரற்ற தனித்தன்மை கொண்டவர்கள் தம் சார் துறைகளில் சிறப்புற்று மிளிர்கின்றனர். பழங்காலத்தில் பாரமான பொருட்களை எடுத்துச்செல்ல மாறுபட்ட முறைகளை கையாண்டனர். இதில் தனித்துவமான சிந்தனை கொண்ட மனிதன் தனதாற்றலால் சக்கரத்தை கண்டறிந்து அச்செயலில் எளிமை கண்டான். இச் சக்கரமே இன்றைய நவீன காலச்சக்கர ஓட்டத்திற்கு ஊன்றுகோலாகிற்று. அதன் போக்கில் ஒவ்வொரு தனி மனிதனும் இந்த உலகில் பிறந்ததிற்கு பயனாக தனதான பங்களிப்பை வழங்குகின்றான். ஆகையால் தான் உலகம் தோன்றிய நாள் முதல் உணவு, உடை, மொழி, நாகரிகம், என்று மனித குலம் வளர்ச்சிப் பாதையில் நகர்கின்றது, ஒருவருக்கொருவர் தங்கள் சிந்தையைப் பகிர்ந்து முறையாகப் பயன்படுத்துவதால் தான் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. எனவே தனிமனித ஒழுக்கமும், சீரிய சிந்தனைகளும் தான் உலகம் பல்வேறு பரிணாமங்களில் வளர்ச்சியடைய காரணமாக விளங்கிற்று.

நூறு சதவீதம் தன்னைப்போல் இன்னொருவரைக் காணமுடியாத் தனித்துவம் பெற்று விளங்கும் மனிதன், மனித சமுதாயம் என்னும் பொதுத்தன்மையால் கட்டுண்டு செயல்படுகின்றான். எல்லா செயல்களிலும் மாறுபட்ட சிந்தனைகள் ஒருங்கிணைந்து அவை பல கோணங்களில் ஆராயப்பட்டு பல்வேறு தளங்களில் மேம்படுத்தப்படுகின்றன. இத்தகைய தனித்துவமான குணமே மனித வளர்ச்சிக்கு மென்மேலும் மெருகூட்டமாய் திகழ்கின்றது. நுண்ணோக்கி பார்க்கும் அறிவு தனித்துவமானவர்களின் பொதுத்தன்மை. அத் தன்மை எதைக் கூர்ந்து கவனிக்கிறார்கள் என்பதை பொறுத்து திறமைகள் புலப்படுகின்றது. ஆதலால் தனித்துவமான மக்கள் இணைந்து செயல்படும்போது மகத்துவமான மாற்றங்கள் நிலைத்து நிற்கின்றன. தனியொரு மனிதனின் உணவும், நியாயமான உரிமைகளும் பாதுகாக்கும் வகையில் நம்பிக்கையோடு செயல்படும் சமுதாயமே "தன்னிறைவு பெற்ற சமுதாயமாக" விளங்கும். அதேபோல் தனித்துவமாக சிறந்துவிளங்கும் மக்கள் மற்றவர் சிந்தனைகளை மதித்து அன்பால் இணைந்து ஒற்றுமையாக இயங்கும் சமுதாயமே "தன்னிகரற்று விளங்க" முடியும். மாறுபட்ட சிந்தனைகள்தான் உலகில் புதுமைகளை ஏற்படுத்தும். ஒருங்கிணையும் தனித்தன்மைகளே சமுதாய அறிவின் விரிவாக்கமாக செயல்படும். பல்வகையான வண்ணங்கள் சேர்ந்தே அழகான ஓவியம் பிறக்கும் என்பது போல பலதரப்பட்ட எண்ணங்கள் சேர்ந்த சமுதாயமே உலகை வளமாக்கும். தனித்தன்மை என்பது அவரவர் உள்ளுணர்வுக்கேற்ற வகையில் இருப்பதால் அது வானவில் போல அழகாக வெளிப்படும். மனிதன் குழுவாக இணைந்து செயல்படும் நேர்த்தியால் வேற்றுமையில் ஒற்றுமையை வெளிப்படுத்தி உலகின் உயர்ந்த பல பிரமிப்பூட்டும் செயல்களை செய்து உயர்ந்து நிற்கின்றான். சமுதாயத்தில் ஒரு அங்கமாக இணைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்படும்போது தன் தனித்தன்மையால் சிந்திக்கும் மனிதன் ஆயிரத்தில் ஒருவனாக தன்னிகரற்ற தலைவனாக உயர்த்தப்படுகின்றான்.

**"வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கரையான்**
**தேன் சிலம்பி யாவர்க்குஞ் செய்யரிதால் - யாம் பெரிதும்**
**வல்லோமே என்று வலிமை சொல வேண்டாங்காண்**
**எல்லார்க்கும் ஒவ்வொன் றெளிது"**

என ஔவையார் இயம்பியதைப்போல ஒவ்வொரு மனிதருக்கும் ஒரு சிறப்புத் தகுதி இருக்கும். இதில் ஒரு சிலவற்றை மட்டும் உயர்வென்று கொண்டாடுவது பாரபட்சமானது. உலகிற்கு பயன்படும் நேர்மையான சிந்தனைகள் எவ் வடிவில் இருந்தாலும் அவை ஆராய்ந்து கொள்ளத்தக்கவை. பல்தரப்பட்ட மக்களும் தங்களுடைய தனித்தன்மையால் பல்வகையான சாதனைகளை படைக்கின்றனர். இதில் எல்லா சாதனைகளும் உடனடியாக வெளியுலகத்திற்கு தெரிவதில்லை. தினமும் கடினமாக வேலை செய்யும் மனிதர்கள் தம் உழைப்பால் கிடைத்த பணத்தை ஒரு ரூபாய் கூட தவறான வழியில வீணாக்காமல் குடும்பத்தின் நியாயமானத் தேவைகளை நிறைவேற்ற பயன்படுத்துவதே ஒரு சாதனை என்ற நிலையில் வாழ்கின்றனர். தங்களுடைய மனஉறுதியால் குடும்ப நிலையினை மேலும் உயர்த்த வேண்டும் என்ற குறிக்கோளுடன் நேர்மையாக பாடுபடும் சாமான்யர்கள் அனைவருமே சமூகத்தை உயர்த்தும் சாதனையாளர்களே. மற்றும் வரவுக்குள் செலவு செய்து உறவுகளையும் அனுசரித்து ஒழுக்கமான தலைமுறைகளை உருவாக்கி குடும்பத்தை திறம்பட நிர்வகிக்கும் இல்லத்தரசிகளும் இனிமையான சாதனையாளர்களே. **"உள்ளுணர்வில் விழிப்போடு இருந்து சமூக பொறுப்போடு செயல்பட்டு"** தங்கள் நிலையில் முன்னேறும் அனைவருமே சமூகத்தை உயர்த்தும் சாதனையாளர்களே. இவர்கள் சாதனைகள் புத்தகத்தில் இடம்பெறாவிட்டாலும் வருங்காலத் தலைமுறைகள் பேசும் வரலாற்று பக்கங்களில் தலைநிமிர்ந்து உச்சரிக்கப்படுவார்கள். ஆதலால் ஒழுக்கமாகவும், நேர்மையாகவும், வாழ்ந்து தன் தலைமுறைகளை உயர்த்துவதற்கு தன்னையே ஆயுதமாக பயன்படுத்தும் ஒவ்வொரு தனி மனிதரும் சமூகத்தை உயர்த்தும் தனித்துவமான சாதனையாளர்தான்.

**"தனித்துவமான சாதனையாளர்கள் அனைவருக்கும் வளமான வாழ்த்துக்களை இத் தருணத்தில் சமர்பிக்கின்றேன்"**

*திருமதி.ஐ.அனுராஜா (ஆர்த்தி)*
*ஆசிரியர்*

---

## கொவிட் -19

அறிவும் அனுபவமும் கலந்து
விஞ்ஞானம் பிரசவித்த
கொலைகாரன் இவன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளியில் எனது இறுதி நாட்கள்

காலங்கள் மாறலாம் நேரங்கள் கழியலாம்
என் இனிய பாடசாலை நாட்கள்
என்றுமே அழியாது
என் இதயத்துடிப்பிற்கு அர்த்தம் தேடித்தந்தது
பள்ளிக்கூடமே

பள்ளியின் முதல் நாள் - எனது
இறுதி நாள் வரை மறையாது
பள்ளியின் முதல் நட்பு - என்றுமே
அழியாது

தோழியர் கூட்டமாய் பள்ளிச்சூழலை
சுற்றியது
தோழிகளோடு மேடையேறி
இனிய கீதம் இசைத்தது
உணவைப் பகிர்ந்து உண்டது
தோழியர் பெயரை - மேசையில்
கிறுக்கி இரசித்தது
மாணவ தலைவர்களாய் பதவி ஏற்றது
என்றும் மறக்காது



உருப்படியாய் தேடிய நட்புக்கள்
பள்ளியில் மட்டுமே
என் கண்களில் இருந்து - நீர்
வழிகிறது
என் பாடசாலை நாட்களை இழக்கப்போகிறேன்
என்றபோது

நான் இழந்த பலவற்றைப் பெற்றது
என் பள்ளிக்கூடத்திலே
கருவறை இன்பம் சில நாட்களே - ஆனால்
என் பள்ளியறை - எனது
இறுதி நாள் வரை நீடிக்கும்
வாழ்வில் இன்பம் என்பது
பள்ளியிலே அதிகம்

வாழ்வில் மறக்கவே முடியாத நாட்கள்
மீளவும் பார்க்க ஆசைப்படும் நாட்கள்
எனது பள்ளி நாட்கள் மட்டுமே

*தனிஷ்கா (2021 கணிதம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கை நோக்கிப் பயணித்தல்

"இலக்கு நீ அடைய நினைப்பது அல்ல, நீ அடைந்ததை பிறர் அடைய நினைப்பது"

"உன் இலக்கிற்கு எல்லை போடாதே உன் இலக்கால் எல்லை போடு" முயற்ச்சி திருவினையாக்கும் எனும் வள்ளுவப் பெருந்தகையின் வாக்கினை கருத்திற்கொண்டு தலைப்பினுள் நுழைகிறேன்.
மாணவர்களிடம் ஆசான்கள் அடிக்கடி கேட்பதுண்டு. உனது எதிர்கால இலக்கு என்ன? என்று

"நான் வைத்தியராக வேண்டும்"
"நான் என்ஜினியர் ஆக வேண்டம்"
"நான் லோயர் ஆக வேண்டம்"
"நான் ஆசியராக வேண்டும்"

என்றவாறு ஒவ்வொருவருடைய ஆசையும் நீண்டு கொண்டு செல்லும். ஆனாலும் நிகழ்கால உலகின் தேவைகளுக்கிணங்க இவையெல்லாம் இலக்கு எனும் பதத்தினை பூரணப்படுத்திவிடமாட்டாது. தற்கால உலகின் முதற் தேவை "மனிதாபிமானமுள்ள நல்ல மானிடன்" எனும் இலக்கினை எட்டிப் பிடிப்பதே. எனவே ஒவ்வொரு மாணவனும் உள்ளத்தில் ஊன்றிப் பதித்துக் கொள்ள வேண்டிய முதல் இலக்கு நல்ல மனிதனாவதொன்றே.

இவ்விலக்கினை நோக்கி வெற்றிகரமாக பயணிக்க வேண்டுமானால் நாம் பல விடயங்களில் முழுமை பெற வேண்டும். ஒழுக்கம், அறிவு, சிந்தனா சக்தி யாவருக்கும் உதவும் உள்ளம், சங்கடங்களைத் தாங்கும் மனப்பாங்கு, பிறர் துக்கத்தில் பங்கெடுத்தல், போன்றவற்றை தொட்டுவிட்டால் "நல்ல மனிதன்" எனும் இலக்கை எட்டிவிடலாம்.

எந்தத்துறையில் சாதிக்க முடிந்தாலும் அதன் பெயருக்கு முன்னால் "நல்ல மனிதன்" எனும் வார்த்தை அடைமொழியாகக் கிடைக்க வேண்டும். "இலக்கு இல்லாத பயணம் துடுப்பு இல்லாத படகுச் சவாரி போன்றது" என்பர். எங்கே போகிறோம் என்று தீர்மானிக்காமல் பயணத்தை தொடங்க முடியாது. போக வேண்டிய இடம் எதுவென்று முடிவுசெய்யப்பட்டால் தான் பயணத்திற்கான அடுத்தகட்ட முயற்சியை மேற்கொள்ள முடியம். "நல்ல மனிமதன்" என்ற உயர்வான சிந்தனையுடன் நமது இலக்கை நோக்கிப் பயணிக்க வேண்டும்.

"நோக்கம் எதுவென்பதை முதலில் தீர்மானி. அதுவே இலக்கு என்பதை உறுதி செய்து கொள்" எனவே ஒவ்வொரு மாணவரும் தமக்குள்ளே ஒரு சாதனை வேட்கை கொண்டு வேகத்துடன் தொழிற்பட வேண்டும். ஒவ்வொருவரினுள்ளும் இறைவன் வித்தியாசமான, அவர்களுக்கே உரித்தான உயர்ரக ஆற்றல்களை புதைத்து வைத்திருக்கின்றான். அவற்றைத் தோண்டியெடுத்து பட்டை தீட்ட வேண்டும்.

தன்னுள் இருக்கும் ஆற்றலும் தனக்கான துறையும் எதுவென சரியாக இனங்கண்டு கொள்வதே பாரியதொரு சாதனைதான். அவற்றினை இனங்கண்ட பின்னர் அத்துறையில் சிகரம் தொட வேண்டும்.

தன்னையும் தனது ஆற்றலையும் அறிந்து செய்யும் முழு மன முயற்சி ஒருபோதும் முக்கியத்துவமிழந்து போவதில்லை. இவ்வாறான முயற்சியில் மூழ்குபவனுக்கு சாதனை முத்துக்கள் சாதாரணமாய் கிடைத்துவிடுகின்றன.

*திருமதி.க..தமயந்தி (ஆசிரியர்)*
*தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச்சாலை வாழ்க

இயற்கை எழில் நிறைந்த
கடலும் கடல் வளமும் சூழ்ந்த
நெய்தல் நிலத்து மக்களை
மாணிக்கமாக்கும் கல்லூரி வாழ்க

ஆலயத்தையும் அரச திணைக்களங்களையும்
அருகருகே கொண்டமைந்து
மத்திய வீதியில் பிரகாசிக்கும்
தரமான எம் பாடசாலை வாழ்க

முன்னோர்கள் தொடக்கம் - இன்று
உள்ளோர்கள் வரை
உயர்நிலை அடைய
உரமூட்டிய கல்லூரி வாழ்க

துணிவாய் செயலாற்றும் தலைவர்
கண்ணியமாய் கடமையாற்றும் ஆசான்கள்
கருத்துடன் கற்கும் மாணவர்கள்
ஒருமித்த எம்சாலை வாழ்க

அழகியல் கலைகளோடு
அனைத்து பாடத்துறைகளும்
நூலகமும் கணிணி அறையும்
சாலையை அழகூட்டும்

நல்லோரின் ஆசியுடன்
நன்றாக எம் பாடசாலை வளர்ந்திட
கல்வி, ஒழுக்கம், தூய்மையை பேணி
ஒன்றிணைவோம் நாம் எல்லோரும்

*லோ.பவதாரணி (2023 உயிரியல்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானவில் தோற்றம்


பல வண்ணங்களில் கண்ணை கவரும் வகையில் தோன்றும் வானவில் வானையே அழகுபடுத்துகின்றது. அவ்வழகிய வானவில் போன்றே இயற்கையில் பல்வேறு அழகிய நிழ்வுகள் நிகழ்கின்றன. அவை ஒவ்வொன்றின் பின்னும் ஒரு விஞ்ஞானக் காரணம் காணப்படுகின்றது. அவ்வாறே இந்த வானவில்லின் தோற்றத்திற்கும் ஒரு விஞ்ஞான காரணம் உள்ளது.

சூரிய ஒளியின் விளைவால் உருவாக்கப்படும் வானவில்லானது சூரியனிற்கு நேர் எதிரே தோன்றுகின்றது. சூரியனிலிருந்து வரும் கதிர்கள் மழைத்துளியின் உள்ளே சென்று பகுதித்தெறிப்படைவதால் வானவில் தோன்றுகின்றது. அதெப்படி சூரிய ஒளியில் எந்த நிறமும் தெரியவில்லையே அந்த ஒளி மழைத்துளியில் பகுதித்தெறிப்படைந்து எவ்வாறு ஏழு நிறம் தோன்றியதென நீங்கள் கேள்வி எழுப்பலாம். அதாவது சூரியனில் இருந்து வரும் வெள்ளொளி மழைத்துளியில் முதலில் முறிவடைகிறது. இதன்போது அவ்வெள்ளொளி ஏழு நிறங்களாகப் பிரிகின்றது. வானவில்லில் தோன்றும் ஏழு நிறங்களின் சேர்க்கையாகவே வெள்ளொளி காணப்படுகின்றது. ஆகவேதான் வெள்ளொளிக்கற்றையில் உள்ள ஏழு நிறக்கதிர்களும் வெவ்வேறு அலைநீளங்களை கொண்டவையாகையால் வெவ்வேறு விதமாக முறிவடைகின்றது. இதனாலே ஏழு நிறக்கதிர்களும் வெவ்வேறாகப் பிரிகின்றது. இதனாலேயே எமக்கு ஏழு நிறங்களும் தனித்தனியே தெரிகின்றது.

நாம் வானவில்லை அவதானிக்கும்போது ஒரு வானவில்லிற்குப் புறத்தே இன்னொரு தெளிவற்ற வானவில்லை காணக்கூடியதாக உள்ளது. இதிலே நாம் காணும் பிரகாசமான வானவில் முதன்மை வானவில் எனவும் மற்றய வானவில் துணை வானவில் எனவும் அழைக்கப்படுகின்றது. சூரிய ஒளியானது ஒருமுறை மழைத்துளியினுள் பகுதித்தெறிப்படைவதால் முதன் முதன்மை வானவில்லும் இருமுறை பகுதித்தெறிப்படைவதால் துணை வானவில்லும் தோன்றும். சூரிய ஒளியின் ஒரு சில பகுதித் தெறிப்படையும். துணை வானவில் தோன்றும்போது இருமுறை பகுதித்தெறிப்படைவதால் சொற்ப அளவான கதிர்களினாலேயே துணை வானவில் தோன்றுகிறது. ஆகவேதான் துணை வானவில் பிரகாசம் குறைவாகக் காணப்படுகின்றது. சில வேளை எம்மால் அவதானிக்க முடியாமலும் போகின்றது. சூரிய ஒளியானது மழைத்துளியில் சென்று வானவில் தோன்றும் விதம் பின்வரும் படத்தின் மூலம் விளங்கிக்கொள்ள முடியும்.




முதன்மை வானவில்





துணை வானவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானவில்லின் சிவப்பு, செம்மஞ்சள், மஞ்சள், பச்சை, நீலம், கருநீலம், ஊதா என்ற ஒழுங்கில் தோன்றுகின்றது. முதன்மை வானவில்லின் உள் விளிம்பில் சிவப்பு நிறமும் வெளி விளிம்பில் ஊதா நிறமும் காணப்படுகின்றது. இதேபோல் துணை வானவில்லின் உள் விளிம்பில் ஊதா நிறமும் வெளிவிளிம்பில் சிவப்பு நிறமும் தோன்றும்.




*வி.நிதர்ஷன் (2022 கணிதம்)*

---

## வாழ்க தாய்த்தமிழ்

நினைத்துப் பார்க்கிறேன் நித்தமும் என் தமிழை
நிகழ்காலத்தில் என்தமிழ் நிச்சயம் இருக்கிறதோ என்ற மனக்குமுறலில்
என் பசுந்தமிழ் பறந்து போனதோ?
என் தேன் தமிழ் தேடுவாரற்றுப் போனதோ?
என் தாய்த்தமிழ் தன்னையிழந்து போனதோ?
தெரியவில்லையே!

ஆயிரம் ஆண்டுகள் போனாலும் ஆனந்தமாய் என் நாவில் நிற்கும்
என்று நான் நினைத்த தமிழோ! இன்று
ஆங்கில மோகத்தில் ஆளரவமற்று போனது
தாங்கொனா துயரத்தில் என் தாய்த்தமிழ் கலங்குகிறது
மூடரும் முட்டாள்களும் என் தாய்த்தமிழ் மறந்து தத்தளிக்கின்றனர்

எதிர்கால சந்ததி என் தாய்த்தமிழை நினைக்குமோ என்று
தினம் தினம் என் இதயம் தீப்பிளம்பாய் கொதிக்கிறது
வருங்காலத்தில் என் தமிழ் வளர்க்க பாரதி இல்லையே
வருவது தீங்கு தானோ என்றெண்ண தமிழ்மகளும் மறந்தோரே
கேளுங்கள்! என் உயிர் மூச்சிருக்கும் வரை தமிழ் வாழும் வாழ வைப்பேன்!

*(2022 வர்த்தகப் பிரிவு)*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் பாடசாலையில் என் தொடக்கம்

அடுக்கிய புத்தக பையுடன்
ஆயிரம் ஆசைகள் சுமந்து
நடுக்கிய சிறு பதட்டத்துடன்
ஆவலோடு முதல் நாள் வருகை

ஆயிரம் ஆற்றல்களையும் விந்தைகளையும்
அறிவுரையாகவும் அன்பாகவும்
அனைத்து ஒழுக்கங்களையும் எடுத்துக்கூறி
வகுப்பறைக்கு அனுப்பி வைத்த அதிபர்



வகுப்பறை செல்லும் வழியிலே
வரிசையாக பல விபரங்களை விசாரித்து
வஞ்சகமில்லாத தன் பேச்சால்
வழிப்படுத்திய ஆசிரியர்

பத்தாம் தரத்தில் படிப்பதற்காய்
படியேறி பள்ளி அறைக்குள் நுழைகையிலே
பண்போடு எனை அரவணைத்து வரவேற்ற
பதுமையான அனுபவம் நிறைந்த ஆசிரியர்

புதிதாக வந்த எனக்கு
புரியாத விடயங்கள் பற்பலவும்
புன்னகையோடு புகட்டிய
புத்தியிலும் குணத்திலும் நிறைந்த மாணவர்கள்

மாண்பென்னும் மகுடத்தை எனக்குச் சூட்டி
மண்ணிலே சிறந்த மாணவராக்கி
என் வெற்றிக்கும் பாதையமைத்து
எப்போதும் என் அடையாளமாய் என்னோடு என் பாடசாலை

*Y. தர்ஷிகா (2023 B.Tech)*

## கனவு

மனதுக்குள் விழுந்த விதை
முயற்சியை உரமாக்கி
முளைத்த விருட்சம்
- இ.கேதீஸ்வரன் -

ஒரு முறை வந்தால்
அது கனவு.
இருமுறை வந்தால்
அது ஆசை.
பல முறை வந்தால்
அது இலட்சியம்.
- அப்துல் கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜொலிக்கிறதே ஆலங்கேணி

ஆன்றோரும் சான்றோரும் ஆற்றல் மிகு மாணவரும்
ஆண்மீக சிந்தனையும் ஆலய தரிசனமும்
ஆலமரவேர் போல ஆகாயக் கிளை மேலே
சுதந்திரமாய் பறந்தோடும் சிட்டாக எம்சிறார்கள்
அமைதியான சூழ்நிலையும் அன்புடனே வாழ்குடிகள்
அத்தனையும் நிறைந்த எம் ஆலங் கேணியிலே

பற்பலவே கதைகள் பேசி பண்புடனே கல்வி கற்று
கற்பனைக்கு எட்டாத கல்விமான்கள் பல தோன்றி
தற்பெருமை பேசிடாமல் தரணியிலே மேலோங்கி
மங்கிடாத சாதனைகள் மலைபோல தான் குவித்து
சங்கரனின் மகனான சதுர்த்தி நாயகனின்
பொற்பாதம் தொழுதவளாய் பூமியிலே தான் பிறந்தேன்

பொன்விளையும் கேணியிலே பொன்மகனின் துணையுடனே
கலையினிலும் கல்வியிலும் சிறந்த எம் கல்விக்கூடம்
கவிஞரையும் கனிமலராய் தந்த எம் பள்ளிக்கூடம்
தாயினது கருவினிலே தான் உதித்த சிசு போல
பக்குவமும் பாதுகாப்பும் நிறைந்து வெளி வந்தனரே – எம்
தாய் மண்ணின் பெருமையினை தலைநிமிர செய்தவராய்

சொல்லிலே அடங்காத சொத்தான ஆசானும்
சொப்பனத்திற்கடங்கா சொர்க்கமாய் மாணவரும்
தொண்மையும் புதுமையும் தொடர்ந்துணர்த்தும் கவிஞரும்
தொன்று தொட்டு வாழ்ந்துவரும் தொல்லையில்லா மக்களும்
மொட்டிலே வரும் பூவும் மோகன மலர் மரமும்
கட்டடங்கா காளைகளும் எம் மண்ணிண் பெருமை சொல்லும்

இதமான காற்றடிக்க இசை சூழ்ந்து பாட்டெடுக்க
நிஜமான நினைவலைகள் நெஞ்சதைத் தொட்டுச் செல்ல
இளந்துளிர்கள் இயற்கையை மெருகூட்டி இதம் பாட
இனிமையில் தனைமறந்து கலைமகள் நடமாட
இயற்கையும் தனைமறந்து எழில்பாடும் கேணியிலே
ஆழ்கடல் முத்தாக ஜொலிக்கிறதே ஆலங்கேணி

*ச.கவிப்பிரீதா (2023 B.Tech)*

---

**உண்மை**

ஒளிந்து கிடக்காத - உன்னத
உணர்வின் - செல்லப்
பிள்ளை இவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டிலேயே மண்புழு உரம் (*Vermi compost*) செய்வோம்

தற்போது இலங்கையில் அசேதன உரங்களிற்கு தட்டுப்பாடான நிலையில் சேதன உரப்பயன்பாடு விவசாயத்தில் முக்கிய இடம் வகிக்கத் தொடங்கியுள்ளது. அந்த வகையில் "மண்புழு உரம்" (*Vermi compost*) தயாரிப்பானது விரைவாகவும், வினைத்திறனாகவும் சேதன உரத்தை பெற்றுக் கொள்ளும் ஒரு முறையாகும். மண்புழு உரமானது இலகுவாக தயாரிக்கக்கூடிய அதிக போசணையடக்கம் கொண்ட சேதனப் பசளையாகும்

நம் வீட்டு சமயலறைக் கழிவுகளான காய்கறி தோல்கள், வெங்காயத்தோல், பழத்தோல் இவற்றை வைத்து மண்புழு உரம் சுலபமாக வீட்டிலேயே தயாரிக்கலாம். இம் மண்புழு உரத்தை தயாரிப்பதற்கு 30 – 40 நாட்கள் எடுக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. அதிகபடியான சிரமம் ஏதும் இருக்காது. பின்வரும் குறிப்புக்களை சரியான முறையில் பின்பற்றினால் காசுகொடுத்து கடைக்குச் சென்று உரம் வாங்கவேண்டிய தேவை இல்லை. உங்கள் வீட்டில் இருக்கும் பழப்பயிர், பூச்செடிகள், காய்கறிப்பயிர்கள் போன்றவற்றில் அதிகளவான விளைச்சலைப் பெறுவதற்கு இம் மண்புழு உரம் உதவியாக இருக்கும்.

இம் மண்புழு உரத்தை எப்டி தயார் செய்வது என்பதைப்பற்றி பார்க்கலாம்.

முதலில் இந்த உரத்தை தயாரிப்பதற்கு 40% காய்கறிக் கழிவுகள், தோல்கள், 30% வெங்காயத் தோல், செம்மண் 15%, மண்புழு உரம் 10%, வேப்பம் இலை 5%, இந்த விகிதத்தில் கலவையை சேர்க்க வேண்டும். புளித்த தயிர் ஒரு டம்ளர். இதில் மற்றப் பொருட்கள் எல்லாம் கொஞ்சம் அதிகபடியாகவோ, குறைவாகவோ இருக்கலாம்

இப்போது $0.1m^3$ கனவளவு அல்லது $100l$ தொட்டியை எடுத்துக்கொள்ள வேண்டும் பிளாஸ்டிக் தொட்டியாக இருந்தாலும் பறவாயில்லை. அந்தத் தொட்டியில் முதலில் ஒரு படை செம்மண்ணைத் தூவிய பின் இரண்டாவது படையாக மண்புழு உரம் தூவ வேண்டும். மூன்றாம் படையாக காய்கறிக் கழிவுகளை தூவிவிட வேண்டும். பின் இந்த இடத்தில் ஒரு டம்லர் அளவு தயிரை சேர்த்து கொள்க.

செம்மண், மண்புழு உரம், காய்கறிக்கழிவு இந்த அடுக்கில் மீண்டும் ஒருமுறை இந்த மூன்று பொருட்களையும் ஒன்றாக கலந்து தூவ வேண்டும். இறுதியாக வேப்பிலை தூவி அதன் மேல் செம்மண் தூவி கலவை கலப்பதை நிறைவு செய்து கொள்ளுங்கள். எல்லாப் படையும் ஒரு இன்ச் அளவு உயரம் இருக்கும் வகையில் தூவிவிட வேண்டும். இறுதியாக குளிக்கின்ற ஜக் அளவு தண்ணீரைத் தெளித்து விட வேண்டும். தேவையற்ற தண்ணீர் ஓட்டை வழியாக வெளியேறும். ஆதை எடுத்து மீண்டும் உரத் தொட்டியிலேயே ஊற்ற வேண்டும். அந்தத் தண்ணீரை வீணாக்காதீர்கள் தொட்டியின் அடியில் ஒரு பாத்திரம் வைத்துக்கொள்ளுங்கள்.

இப்போது நீங்கள் தயார் செய்து வைத்திருக்கும் கலவையானது 25 நாட்கள் வரை வெய்யிலிலே இருக்க வேண்டும். 25 நாட்களும், டம்லர் அளவு தண்ணீர் ஊற்றிக்கொண்டே இருக்க வேண்டும். 25ம் நாள் இந்தக் கலவையை ஒரு கம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தோ அல்லது உங்களிடம் மண்ணைக் கிளறிவிட எந்தப் பொருள் இருக்கிறதோ அதை வைத்து நன்றாக கிளறிவிட வேண்டும். அடியில் இருக்கும் கலவை மேலே வர வேண்டும். மேலே இருக்கும் கலவை அடியில் போகும் அளவிற்கு கலந்து விடுங்கள் அப்போது உங்களுக்கு உரம் கறுப்பாக மாறியிருப்பதைக் காணலாம்.

கிளறி விட்டு பின்பு 5 நாட்கள் தொட்டியில் இருக்கும் உரம் அப்படியே இருக்கட்டும். மீதமுள்ள 5 நாட்களும் ½ டம்லர் தண்ணீரை ஊற்றி வர வேண்டும் அதன் பின்பு 30வது நாள் இந்தத் தொட்டியில் இருக்கும் கலவையை ஓர் உறையில் கொட்டி வெயிலில் காய விட்டுவிடுங்கள்.

கறுப்பு நிறத்தில் உதிரி உதிரியாக மண்புழு உரம் கடைகளில் எப்படி கிடைக்கின்றதோ நீங்கள் வீட்டில் தயாரித்த இந்த உரமும் அதே நிறத்தில் அதே பக்குவத்தில் கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

உங்களுடைய வீட்டில் இருக்கும் செடி வைக்கும் தொட்டியில் மண்ணோடு சேர்த்து இந்த மண்புழு உரத்தை சேர்த்துப் பயன்படுத்தினால் உங்கள் வீட்டு செடி செழிப்பாக வளரும்

இந்த மண்புழு உரம் தாயரிக்க 30 நாட்கள் தேவைப்பட்டாலும் வேலைப்பழு அதிகம் இல்லை. உரக் கலவையை தயார் செய்து வைத்துவிட்டால் அது அப்படியே ஓரமாக இருக்கும். தினமும் தண்ணீர் ஊற்றினால் மட்டும் போதும். கட்டாயம் இந்த உரக் கலவை உள்ள தொட்டி 30 நாட்களும் நேரடி வெய்யிலில் இருக்க வேண்டும். என்பதை நினைவில் கொள்ளுங்கள். உங்களிற்குப் பிடித்திருந்தால் உங்கள் வீட்டில நிறைய செடிகளை வைத்திருந்தால் இந்தக் குறிப்பை ஒரு முறை பயன்படுத்திப்பாருங்கள்.

*ப.ஸனுக்ஷி (2023 B.Tech)*

---

## அறிந்துகொள்வோம் :

- வியர்வையில் கந்தகச்சத்து இருப்தால் வெள்ளி ஆபரணங்கள் கறுத்துப் போய்விடுகின்றன.
- மண்பானை நீர் குளிர்ந்திருக்கக் காரணம் பானை நுண்துளைகள் வழியே நீர் ஆவியாவதே
- நத்தை தன் இருப்பிடத்தை விட்டு எவ்வளவு தூரம் நகர்ந்து சென்றாலும் தன் வழியை மறப்பதில்லை திரும்பித் தன் இருப்பிடத்திற்கு வந்து செர்ந்துவிடும்
- உப்பை விரும்பி உண்ணும் விலங்கு முள்ளாம் பன்றி
- 2ம் உலகப்போரின் போது உலோகப்பற்றாக்குறை ஏற்பட்டதாம் அப்போது ஆஸ்கார் விருதுகள் மரத்தால் செதுக்கப்பட்டன.
- ஒரு நாளைக்கு ஒரு மனிதனுக்க தேவையான உப்பின் அளவு 3$g$ ஆகும்

*சு.கவினயா (2023 உயிரியல்)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபவமே சிறந்த ஆசான்

வாழ்வில் நாம் கடந்து வரும் பல சந்தர்பங்கள் உண்டு. நாம் பிறந்ததில் இருந்து இறக்கும் வரை வாழ்வின் ஒவ்வொரு வயதை கடக்கும் பொழுதும் எண்ணில் அடங்காத அனுபவவங்களை பெறுகின்றோம். நாம் பிறந்ததில் இருந்து இறக்கும் வரை வாழ்வின் ஒவ்வொரு வயதை கடக்கும் பொழுதும் எண்ணில் அடங்காத அனுபவவங்களை பெறுகின்றோம். சிறிய சிறிய விடயம் தொடக்கம் பெரிய பெரிய விடயங்கள் வரை அனுபவங்கள் எம்மை ஆளுகின்றது. அதுமட்டுமன்றி அனுபவங்கள் நாம் செய்யும் செயல்களாலும் மற்றும் எம்மை சூழ நடக்கும் விடயங்களாலும் தான் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற எந்த ஒரு அவசியமும் கிடையாது. நம்மோடு பழகுபவர்களாலும், நம்மை வழி நடத்துபவர்களான அனுபவ பகிர்வு மூலம் கூட அனுபவங்களை சேசகரித்துக் கொள்ள முடியும். அனுபவம் என்பது கடற்கரையிலுள்ள சிப்பிகளைப் போன்றது. அதனை சேகரித்து எவ்வாறு அழகான கை வண்ணங்களை பெற முடிகிறதோ அதே போன்று தான் அனுபவமும் ஆகும். **அனுபவமானது பார்த்து கேட்டு தொட்டு உணர்ந்து எமது புலங்களினூடாக சுயமாக பெற்ற கற்கையாகும்.**

அனுபவங்களின் நல்லனவும் உண்டு தீயனவும் உண்டு அதில் நமக்கானது எது என்றால்? இரண்டுமே ஏனெனில் தீயவை நம்மை நல்வழியில் செல்வதற்கு வழிப்படுத்துபவை. பொய் கூறுபவனின் உண்மை அவன் கூறிய பொய்களுக்குள்ளேயே புதைந்துள்ளது. அதே போல தான் தீய அனுபவங்கள் கிடைக்கும் பொழுதுதான் அதனை நாம் திருத்திக்கொள்ள முடியும். இனிமேலும் முகம் கொடுக்காது தவிர்த்துக் கொள்வோம்.

அந்த ஐந்து வயது சிறுவன் தன்னுடைய வயதிற்கான அனுபவங்களை பெறுவதற்கான முதன்மை வழிகாட்டியாக அவனது பெற்றோர்களே அமைகின்றனர். பெற்றோர்கள் தமது பிள்ளைகட்கு, நல்ல அனுபவங்களை பெறவேண்டும் என்று பல்வேறு வழிகள் தயார்படுத்தலை மேற்கொள்கின்றனர். அதில் முதலாவது சிறந்த வழிகாட்டியாக நல்ல புத்தகங்கள் அமைகின்றன.

அவன் அதனை வாசிப்பதன் மூலம் வரும் காலம் அவனை வரவேற்கக் காத்திருக்கிறது. இதன் மூலம் அவன் ஒரு சிறந்த மீத்திறன் மிக்க மாணவனாக விளங்குகின்றான்.

அடுத்ததாக பாடசாலை சமூகம் நல்லவற்றையும், தீயவற்றையும் இனிதென கற்பிக்கும் ஆசிரிய அசான்கள் பல்வேறுபட்ட சமூகமும் சூழலும் பல்வேறுபட்ட அனுபவங்களை வழங்கக்கூடியது. அந்த வீட்டுச்சூழலின் அடுத்தபடியாக பாடசாலைச் சுற்றாடல் பிறிதொரு அனுபவத்தை வழங்கிக்கொண்டிருக்கின்றது.

பாடசாலையின் பாடவிதானம் மட்டுமல்லாது களப்பயணம், கல்விச்சுற்றுலா, பல்வேறு போட்டி நிகழ்வுகள், காலைப்பிரார்த்தனை, வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டிகள் என ஒரு விதமான இணைப்பாடவிதானமும் சந்தோசமான அனுபவத்தையும் வழங்குவது மட்டுமல்லாது போட்டி மிகுந்த உலகுக்குள் நுழைய அறிவு ரீதியான அனுபவத்தை சேகரிக்க வழிசமைக்கின்றது.

இன்னும் சில சம்பவங்கள் உண்டு முதலில் கசப்பாக இருந்தாலும் காலப்போக்கில் நினைத்துப் பார்க்கையில் இனிமையான சம்பவங்களாகும். அதில் முதலாவது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளில் நடைபெறும் மாதாந்த பரீட்சைகளும் தவணைப் பரீட்சைகளும் ஆகும். பரீட்சைகட்கான நேர அட்டவணை வந்ததும் பரீட்சைக்கான தயார்ப்படுத்தல் புள்ளிகள் வந்ததும் பெற்றோர் சந்திப்பு, அதுமுடிந்து அன்றிரவு வீட்டில் நமக்கு நடைபெறும் மேள, தாள கச்சேரிகள் கண்டிப்புக்கள் என பல விடயங்கள் காணப்பட்டாலும் அவற்றை பின்னர் சிந்திக்கும் போது.

அந்த அனுபவங்கள் ஒரு நீங்கா நினைவுகளாக மாறுகின்றன. இதனை விட நமது வாழ்வில் மறக்க முடியாத அனுபவங்களை சேமித்த வயது பதினெட்டு வயதாகும். அதனை சேமித்த இடமாக பாடசாலை கூடமும் காணப்படும். ஓயாத சிரிப்பும், விளையாட்டும், படித்ததுடன் இன்னொருபக்கம் சகபாடிகளுடன் சண்டைபோடுதல், பின் சமாதானம் பேசுதல் அதிபரிடம் ஆலோசனைகள் எனப்பல உளது. இவை அனைத்தும் கல்லில் எழுத்துப்போல் நம் நெஞ்சில் பதிந்தவை.

இதனைவிட நம்மை போட்டிப் பரீட்சைக்கான க.பொ.த சாதாரணதர பரீட்சை, க.பொ.த உயர்தர பரீட்சை என்பவற்றுக்காக பல தயார்படுத்தல்களில் ஈடுபடவிடும் பாடசாலைகள் முக்கிய பங்கை வகிக்கின்றன. இவை நம்மை போட்டிப்பரீட்சைகளையும் அவற்றில் நாம் வெற்றி பெற செய்ய வேண்டிய விடாமுயற்சிக்கான அனுபவங்களை நமக்கு பெற்றுத் தருகின்றது.

இது நாளைய உலகிற்கான அனைத்து சவால்களையும் எதிர் கொண்டு நாட்டையும் நாட்டு மக்களையும் நேசித்து, அவர்கட்கு சிறந்த பணியை புரியும் நற்பிரஜையாக நம்மைவழிப்படுத்துகின்றன.

18 வருட அனுபவத்தை தான் என்னால் உங்களோடு பகிரமுடியும் இருந்தும் ஒருவரை பிறப்பிலிருந்து இறப்பு வரை நல்ல மற்றும் தீய அனுபவங்களே எம்மை வழிப்படுத்துகின்றன. ஆகவே அனுபவமே சிறந்த ஆசான் எனக் கூறி விடைபெறுகிறேன்.

*K.தரங்கினி (2022 உயிரியல்)*

## Nature notes

- The largest known volcano in our solar system in on Mars called Olympus Mons, it is 88,600 feet high three times as tall as mount Everest and 335 miles across.
- A forest fire moves faster uphill than downhill.
- About one million Earths could fit into our sun.
- Africa is the world's warmest continent.
- About 250,000 species of flowering plants exist on Earth today.
- The largest known iceberg measured in1956 was 207 miles long and 62 miles wide. That is only what showed above water about nine tenths of an iceberg is under water, so that was a huge chunk of rice

*I.Christena (2023 Bio Tech)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

People need you
When they are frustrated
Because you're honest to them, so
Don't break promises
For you'll be put alone
And made as a clown

People need you
When they're is a need
For no one can fulfill it
Because people are malicious
Though, Don't break promises
For you become valuable as a diamond

People need you
When they realize fake
That everyone are snake(s)
Be true to others
For they need you a lot;
A lot as the sea

People need you
To learn how a human be,
Genuine makes you pure
For you make them cure
Be honest to all
By being honest to your soul

*Ramsaran (2023)*

## விதைப்பவன் உவமையின் மறு நோக்கு

விதைப்பவர் ஒருவர் விதைக்கச் சென்றார். அவர் விதைக்கும் போது சில விதைகள் வழியோரம் விழுந்தன. பறவைகள் வந்து அவற்றை விழுங்கிவிட்டன. ஒரு சிறு விதைகள் மிகுதியாக மண்ணில்லாப் பாறைப் பகுதிகளில் விழுந்தன. அங்கு மண் ஆழமாக இல்லாததனால் அவை விரைவாக முளைத்தன. ஆனால் கதிரவன் மேலே எழ அவை காய்ந்து உயிரில்லாமல் கருகிப் போயின. மற்றும் சில விதைகள் முற்செடிகளின் இடையே விழுந்தன. முட்செடிகள் முளைத்து அவற்றை நெருக்கி விட்டன. ஆனால் இன்னும் சில விதைகள் நல்ல நிலத்தில் விழுந்தன. அவற்றுள் சில நூறு மடங்காகவும், சில அறுபது மடங்காகவும், சில முப்பது மடங்காகவும் விளைச்சலைக் கொடுத்தன.

கேட்கச்செவி உள்ளோன் கேட்கட்டும் (மத்தேயு 13:3-9) இங்கு விதைப்பபவர்களாக சேவை செய்வோர் நல்லாசான்கள், விதையானது நற்பண்புகள் தொடர்பான அறிவுரைகள், விதைகள் விழும் இடங்கள் மாணவரின் உள்ளங்கள், வழியோரம் விதைக்கப்பட்ட விதைகளுக்கு ஒப்பானவர்கள் நற்பண்பு குறித்த அறிவுரையை கேட்டு புரிந்துகொள்ளமாட்டார்கள். அவர்கள் உள்ளத்தில் விதைக்பட்ட விதைகளை தீயபழக்கங்கள் கைப்பற்றிச் சென்றுவிடும். பாறைப்பகுதிகளில் விதைக்கப்பட்ட விதைகளுக்கு ஒப்பானவர்கள் நற்பண்பு குறித்த அறிவுரையை கேட்டவுடனேயே அதனை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வார்கள். ஆனால் அவர்கள் வேர் அற்றவர்கள் எனவே அவர்கள் சிறிது காலமே அவ் நற்பண்புகளில் நிலைத்திருப்பார்கள். நற்பண்பின் பொருட்டு வேதனை அடைந்தவுடனே தடுமாற்றம் அடைவார்கள். முட்செடிகளின் இடையே விதைக்கப்பட்ட விதைகளுக்கு ஒப்பானவர்கள் நற்பண்பு குறித்த அறிவுரையை கேட்டும் உலக கவலையும் செல்வ மாயையும் அந்த நற்பண்பை நெருக்கி விடுவதால் பயனளிக்கமாட்டார்கள். நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட விதைகளுக்கு ஒப்பானவர்கள் அறிவுரை கேட்டு புரிந்துகொள்வார்கள் அதன்படி நடப்பார்கள். இவர்களில் சிலர் நூறு மடங்கும், சிலர் அறுபது மடங்கும், சிலர் முப்பது மடங்கும் பயனளிப்பார்கள்.

*E. J.*சதுசன் (2022 உயிரியல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Engineering Systems Tech Stream - 2021 Batch



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Commerce Stream - 2021 Batch



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Arts Stream - 2021 Batch



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The city we live

Sri Lanka officially known as the Democratic Socialist Republic of Sri Lanka is consided as one of most beautiful islands in all over the world. In its north is coast there is a port city with rich bio diversity and stunning natural beauties which is Trincomalee.

Trincomalee has a recorded history which spans over more than two and a half thousand years. In ancient times it was addressed as Ko-kanna which refers as Lord's cheek alluding to the cheek shape of Shiva's bull Nandi. As its name suggest it is also know place where lord Shiva resides Koneswara temple has its own history over many centuries which is also called as Dak shina then kailasam and temple of the thousand pillars. Even Ramayana's written form describes how King Ravana and his mother woshiped lord shiva, the orgins of Ravana's cleft and how Ravana's mothers rites were performed at Kaniya Hot water spring. By not only Hindu but also many Sinhala devotees are Konswaram temple being worshipped for many years. Trincomalee is also one of the oldest Cities in Asia, which has been serving as a major sea part for many centuries. Trincomalee habour is also the fifth largest natural harbor in the world. Over many years it has been visited by many local and international traders and many explorers. Because of its geometrical location it played a significant role during the colonial era. Not only has that, because of its large size and security with its accessibility for all crafts in any weather condition made it as finest harbor in the whole world. In present times it has become an important commercial sea port of Sri Lanka.

As we know tourism is one of the major components in Srl Lankan economy. As well as Trincomalee is also a tourist attraction place. From visiting colourful Koneswaram temple to snorkel at Pigeon Island the city has been filled with many adventures. Along with them Marble beach, Sri Pathirakali Amman temple. Fort Fetrick and Gokanna Raja Maha Viharai are some of the major tourist attractions of the city. Even from Army museum to Navy and Maritime museum it has been filled with unlimited spots to enjoy with its picturesque and scenic beaches such as Mable beach and duh bay beach. Trincomalee is the best place to enjoy vacations. Because of its beautiful, hygienic and clean water. Trincomalee is famous for surfing, scuba diving and fishing and whale watching because of its relative shallowness one can walk out over a hundred meter into the sea without the water reaching chest. The city farmous for Blue whale and Dolphin watching and swimming with them.

Even many English authors and poets used poetry Trincomaleeas inspiration for their literature and potery and became connected with the city. Ather C.Clarke who discovered the temple, under water ruins described the city and ruins in reefs og tapoabane. Trincomalee Pathira kali amman temple provides a setting in Wilbur Smith's novel Bird of Prey. Even Arthur Conan Doyle's fmours Sherlock holme's stories feather multiple setting in the city inculiding in a scandal in Bohemia and a singular affair at Trincomalee. Along with Naval and Maritime Academy and Air force Academy ther are many schools located in trincomalee city such as Orr's Hill Vivekananda College,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R.K.M Sri Koneswara Hindu College and Sri Shanmuga Hindu Ladies College. It is also fained the university status in 2001 with high literacy ratio and aesthetic beauties Trincomalee shines as one of the prominent cities in all over Sri Lanka.

*U.Thanushigan (2023 Bio)*


---

## பள்ளிக் காலங்கள்

மல்லிகையின் மணம் போல
மாயவனின் குழல் போல
இனிமையிலே இதம் போன்ற
இமய மலை நினைவுகளாய்

வெண் வெள்ளை உடையணிந்து
வெயில் கண்டு விரண்டோட
கண் கொள்ளாக் காட்சிகளை
காட்டிட நாம் ஒன்றாக

கைதட்டி விரல் கோர்த்து
கலைகள் பல கற்றிடவே




பொன் மொட்டாய் பூவரும்பி
புத்துணர்வாய் செல்வோமே

நெஞ்சினிலே நீங்காத – எம்
நினைவுகள் பல கோர்த்து
கொஞ்சிக் குலாவிடவே
கூடி நாம் பள்ளியிலே

பணிவுடனே ஆசானை
பணிந்து நாம் பயில்வோமே
பண்புடனே கல்வி கற்று
பல சாதனை படைப்போமே

*S.* திருஸாலினி (2023 *Bio Tech*)

---



## உள்ளக சுடரே எரிவாயோ

மன மாசுகள் எல்லாம்
எரிப்பாயோ
வையகம் தன்னை
வாழ்த்திடவே – பல
சோம்பல்கள் நீயும் முறிப்பாயோ
வெய்யவன் கதிர்கள் - நல்
விடியல்கள் நீயும்
காண்பாயோ
அஞ்சிடும் மனதைப்
புதைத்துவிடு – நல்
வளர்ச்சியின் விதையை
விதைத்துவிடு

*Ramsaran (2023)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூ மராங் எனும் வளரியின் வரலாறு

வரலாற்றுக் குறிப்புக்களின் படி 6 முதல் 18ம் நூற்றாண்டு வரை தமிழர்களின் மிகச் சிறந்த ஆயுதமாக இருந்த ஒரு ஆயுதம். மகாபாரதப் போரில் கிருஷ்ணணின் சுதர்சனச் சக்கரம் போன்றது. தமிழர்களின் இந்த ஆயுதம் 17 மற்றும் 18ம் நூற்றாண்டுகளில் ஆங்கிலேய படைகளை அச்சப்படுத்தி அதிர வைத்த ஒரு ஆயுதம் ஆகும். கணிதத்தையும், இயற்பியலையும் கணித்து, ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தொழிநுட்பத்திறன் கொண்ட ஒர் ஆயுதம். போருக்கும், வேட்டைக்கும். வேல், கம்பு. ஈட்டி, வாளுக்கு மாறிய தமிழன் அதன் பின்னர் எதிர்த்து நின்று மிரள வைக்க பயன்படுத்தியது தான் வளரி.

காற்றைக் கிளித்து கண்ணிமைக்கும் நேரத்தில் கதையை முடிக்கும் இந்த வளரிஆங்கிலேயர் காலத்தில் பல தளபதிகளை எஃதம்பிக்க வைத்தது. இனி எதிர்காலத்தில் இந்த ஆயுதத்தையும், கலையையும் எவரும் கற்றுவிடக்கூடாது என்பதற்காகவே சட்டம் போடப்பட்டது. மீறி வீசியவர்கள் கொல்லப்பட்டார்கள்.

வளைந்த வாளை எறி என்பதே வளரி, அவுஸ்திரேலிய ஆதி வாசிகளால் உபயோகப்படுத்தப்பட்ட (*Boomerang*) பூமராங் வளரி போன்றே வடிவமைக்கப்பட்டிருக்கும். ஆனால் அயல் நாட்டினர் அதை விளையாட்டுப் பொருளாகவே பயன்படுத்தினர். ஆனால் அவர்களுக்கு பலநூறு வருடங்களிற்கு முன்பே வளரியை ஆயுதமாக பயன்படுத்தியவன் தமிழன். வளரி வீசும் போது விசை குறையக் கூடாது ஆயுதத்தின் எடை கூடினால் நீண்ட தூரம் வீச முடியாது. குறைந்தால் தாக்கும் திறன் குறையும். அதைவிட ஒரு முக்கியத்துவம் ஒரு இரும்புத்துண்டு காற்றில் சுழன்றபடி இலக்கை நோக்கி செல்வதற்கு அடிப்படையான இணைக் கட்டுப்பாட்டை கொண்டிருக்க வேண்டும். -ஆயுதத்தின் மையத்தில் நிலைகொண்டுள்ள எடை அதன் சமநிலையைக் குவித்து. விசையின் பாதையில் துள்ளியமாக பயணிக்க உதவுகின்றது.வளரியில் தொடங்கும் தொழிநுட்பம் தமிழர்களிற்குரிய தனிச் சாதனைகளை ஆற்றுகின்றது. தமிழ் இலக்கியங்களும், வரலாற்றிலும் வளரியைப் பற்றிய குறிப்புக்கள் பல இருக்கின்றன.

“காடும் காடுசார்ந்த இடமும் முல்லை, முல்லை திணை தலைவன் மால் எனப்படும் மாயோனின் ஆயுதம் வளரி” என்கிறது கலித்தொகை. “மால் எனப்படும் சோழன் வளரி படையுடையவன்” என்கிறது சிலப்பதிகாரம். கள்ளர்களின் பெயரில் “கள்ளர் தடி” என அழைக்கப்பட்டது. என்கிறது தமிழகராதி. ஆங்கிலத் தொள்பொருள் ஆராய்ச்சியாளர் ரொபட்புரூஸ் “வளைதடி கள்ளர்களின் திருமணத்தில் முக்கிய அம்சமாக வளரி இருந்தது” என்கிறார். பண்டய காலத்தில் திருமணத்தில் சீர்களாகவும் வளரி வழங்கப்பட்டது. போர் புரியும் வீரர்கள் தம் கொண்டையில் வளரியை செருகி வைத்திருப்பார்கள் போர் முழங்கும் நேரம் தன் கொண்டையில் இருந்த உருவி எதிரியை போரிட்டு வீழ்த்துவார்கள். அன்று பூஜைக்குரிய பொருளாக வளரி விளங்கியது. மேலும்,

வளரி பற்றி 17, 18ம் நூற்றாண்டுகளில் எண்ணற்ற குறிப்பக்கள் பிரிட்டிஷ் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. வேறெங்கும் இல்லாத ஒரு ஆயுதத்தை பற்றிய ஆச்சரியமும் கண்ணிமைக்கும் நேரத்தில் கழுத்தை வெட்டிச் செல்லும் அதிர்ச்சியும் கலந்த பதிவுகளாக அவை எழுதப்பட்டிருந்தன. ஆங்கிலேய தளகபதிகள் அதிகம் பயந்த ஆயுதமாக வளரி இருந்தது. அன்று பாளையக்காரர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தத்தில் குறிப்பாக கெரில்லா முறையிலான மறைந்திருந்து தாக்கும் போர் முறைக்கு ஏற்ற ஆயுதமாக வளரி இருந்தது. பாளையக்காரர்களின் யுத்தம் முடிவுக்கு வந்தவுடன் ஆங்கிலேய நிர்வாகம் 1801 ஆம் ஆண்டு ஆயுத தடைச் சட்டத்தைக் கொண்டுவந்தது. அதன் படி மக்கள் எவராவது போராயுதங்கள் வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் பொது வெளியில் தூக்கிலடப்படுவார்கள் என்று அறிவித்தனர். பாளையக்காரர்கள், போர்வீரர்கள், குடிமக்கள் எல்லோரும் ஆயுதம் நீக்கப்பட்ட மனிதர்களாக ஆக்கப்பட்டனர். அதன் போது ஆங்கிலேயர்களால் 22000 வளரிகள் கைப்பற்றப்பட்டன. "வளரி" என்ற ஆயுதத்தின் நினைவுகூட இம்மண்ணில் மிஞ்சக்கூடாது என்பதில் ஆங்கிலேயர் உறுதியாக இருந்தனர். வளரி வீசிய கைகள் வெறுங்கைகளாக ஆக்கப்பட்டன. கரங்களில் இருந்து நீங்கிய ஆயுதம் நாளடைவில் மக்களின் நினைவுகளில் இருந்தும் நீங்கத் தொடங்கியது.

பல வரலாற்று குறிப்புக்களின்படி அரிவாளை, கள்ளர்தடி, வளைதடி, பாரவளை, சுழல்படை, படைவட்டம் என்னும் பல பெயரில் வளரி அன்று புழக்கத்தில் இருந்தது. இப்படித் தமிழர்களின் முதன்மையான போர்க்கருவி என்று கலித்தொகை, புறநானூறு, கலிங்கத்துப்பரணி, ஐங்குறுநூறு இலக்கியங்களும் பிற குறிப்புக்களும் தெரியப்படுத்துகின்றன.

இவ்வாறு மிகச்சிறப்பு மிக்க ஆயுதம் வளரி. தற்போது பாதுகாப்பாகவும், கண்காட்சியாகவும் வைத்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

*மா.விஜுஷா (2023 B.Tech)*

## கைக்கூ கவிதைகள்

**பாடசாலை**
வைரங்கள் பட்டை தீட்டும்
கல்விக் கூடம்
விற்பனைக்கு அல்ல

**ஆசிரியர்**
சமுதாய சிற்பிகளை செதுக்கி
செம்மை ஆக்கி
ஏற்றிவிடும் ஏணிகள்

**மாணவர்கள்**
பதின்மூன்று வருடத்தில் உருவாகி
ஆசியாவின் இராணிபோல்
ஜெலிக்கும் இரத்தினங்கள்

**பென்சில்**
அழிக்கும் தவறுக்கு இடங்கொடுக்கும்
மூன்று வருட
அனுபவ எழுத்தானி

**கதிரை**
சிற்பிகளால் சிதைக்கப்பட்டு –
சிறைப்பட்ட
சுமைதாங்கி தாங்கி
அழிக்கபட்ட அடையாளம்

**மொழி**
மௌனத்தில் நீயும் நானும்
பேசிக்கொள்ளும் வார்தைக்கும்
உயிர் கொடுப்பான்

**மௌனம்**
நீயும் நானும் மனதோடு
பேசிக் கொள்ளும்
ஆயிரம் வார்த்தைகள்

**கவிதை**
பொய்யுக்கு அழகு சேர்
மொழிப் பிரவாக
பிறப்பின் சிறப்பு

- இ.கேதீஸ்வரன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி/உ வர்மலை விவேகானந்தா கல்லூரி

## 2020 / 2021 – COVID – 19
## விடுமுறைவிபரம்

### 2020COVID – 19 விடுமுறை

- 2020.03.13 – 2020.06.28 - விசேட விடுமுறை
- 2020.10.05 – 2020.10.09 - விசேட விடுமுறை
- 2020.10.12 – 2020.11.06 - A/L பரீட்சை (விடுமுறை)
- 2020.11.07 – 2020.11.22 - விடுமுறை
- 2020.11.23 - பாடசாலை ஆரம்பம்

### 2021 COVID – 19 விடுமுறை

- 2021.04.27 – 2021.10.24 - விசேட விடுமுறை

### 2021 பாடசாலை தவணை

**1ம் தவணை:**

- முதலாம் கட்டம் - 2021.01.11 – 2021.02.25
- இரண்டாம் கட்டம் - 2021.03.15 – 2021.04.09

**2ம் தவணை**

- 2021.04.19 – 2021.07.30

**3ம் தவணை**

- 2021.08.30 – 2022.04.08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன் தனித்துவம் உணர்ந்திடு

உன் ஒவ்வொரு நொடியும்
உனக்கானது
சிந்திக்கத் தெரிந்த
மிருகம் நீ
சிந்தைக்குள் துளிர்கும் - அந்த
மிருகம் கொண்று நீயாகு

உனக்குள் உனாக்காய்
உருவாகும் உணர்வுக்குள்
உட்கார்ந்துகொள்
உன்னை உரசி
உவகை உடைத்து
உருமாற்றும் உணர்வை
உதறிவிடு

அடுத்தவன் சொல்வதும் செய்வதும்
அவனுக்காய் மட்டுமே
அடுத்தது உன் இலக்கினில்
நீ தொடுத்திட நினைப்பதே
உன் பணியென பணித்திடு

எண்ணம்போல் உயர்த்த - உலகில்
எதுவுமில்லை
எழுவது மட்டுமே உனது
விழுவது அடுத்தவன் - விதைக்க
விரும்பிய உணர்வு

உன்னை உரிமையோடு
நினைத்திரு
விழித்திரு
வெற்றிதான் நீ
விளங்குவாய் அன்று
உலகின் உன்னதம் நீ என்று
வியந்திடும் உலகமே உன்னை
அதுதான் உன் தனித்துவம்
புரிந்துகொள் இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்துகொள்வோம்




பொய் சொல்லித் தப்பிக்க நினைக்காதே. உண்மையைச் சொல்லி மாட்டிக்கொள். ஏனென்றால் பொய் வாழவிடாது. உண்மை சாகவிடாது.

- விவேகானந்தர் -



வாய்ப்புக்காக காத்திருக்காதே. உனக்கான வாய்ப்பை நீயே ஏற்படுத்திக்கொள்.

- அப்துல் கலாம் -



எவராவது தன்னுடைய வாழ்நாளில் ஒரு பிழையும் செய்வதில்லை என்று நினைத்தால், அவர்கள் தாம் தம் வாழ்வில் புதிய முயற்சிகளை செய்து பார்க்கவில்லை என்று பொருள்

- ஆல்பேர்ட் ஐன்ஸ்டீன் -



நம்முடன் வாழ்வோரைப் புரிந்துகொள்வதற்கு, நம்மை நாமே முதற்கண் புரிந்துகொள்வது அவசியம்.

- அன்னை திரேசா –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி மொழிதல்

கல்லூரிக் காலம் எனும் பசுமையான, நெஞ்சை வீட்டு நீங்காத நினைவுச் சாரல்களைச் சுமந்து, கல்விக்கடலின் முக்கிய தடைக்கல்லை தாண்டும் முயற்சிக்கு தயாராய், புதியதோர் உதயம் தேடி சிறகடித்து பறக்கவிருக்கும் இளம் சிட்டுக்களின் பிரியாவிடை நிகழ்வில் "வையாளி – 4" எனும் தொடர் சஞ்சிகையை செதுக்கி வெளியிடுவதில் அகமகிழ்ச்சி அடைகின்றேன்.

வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் புரவி வேகம் கொண்டு எழுந்துவரும் எமது கல்லூரியின் வெற்றித்தடமே வையாளி என்பதன் பொருளாகும். கல்வியிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் சாதனைகள் குவித்திடும் எமது மாணவர்களின் சரித்திரங்கள் ஆவணமாக்கப்பட வேண்டியது அவசியமானதாகும். இதன் ஒரு பகுதியாக வையாளி இருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

"வையாளி – 4" என்ற இந்தச் சஞ்சிகை பிறப்பதற்கு முழுப்பங்களிப்பினையும், உதவிகளையும், ஆலோசனைகளையும், அட்டை வடிவமைப்பிற்கும் உதவி வழங்கிய மதிப்புக்குரிய கல்லூரியின் அதிபர் திரு.க.ரவிதாஸ் அவர்கட்கும் மற்றும் பிரதி அதிபர், உதவி அதிபர்கள் மற்றும் ஆக்கங்களை வழங்கிய ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் நன்றி கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

சஞ்சிகையை தொகுத்து, தட்டச்சிட்டு முழுவடிவம் கொடுத்த ஆசிரியர் திரு.இ.கேதீஸ்வரன் அவர்கட்கும், மற்றும் தரவுகளையும் திருத்தங்களையும் வழங்கி சஞ்சிகையை மெருகூட்டிய ஆசிரியர் திருமதி.க.ஜெயபாலினி அவர்கட்கும், புகைப்பட தொகுப்பிற்கு உதவிய ஆசிரியர் திருமதி.க.தமயந்தி அவர்கட்கும். அச்சிட்டு வழங்கிய **SS Digital's** பதிப்பகதினருக்கும் மற்றும் அனைவருக்கும் உளம் கனிந்த நன்றிகளை உரித்தாக்குகின்றேன்

நன்றி



இவ்வண்ணம்
செல்வி.K.ஹரிஷயா
இதழாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org